நவீன கதைகளின் தந்தை

சாசரின்

சுவையான வர்ணனைகள்

GEOFFERREY CHAUCER'S
"Prologue to Canterbury Tales"

பேராசிரியர் பழ. மணி

நவீன கதைகளின் தந்தை சாசரின் சுவையான வர்ணனைகள்

Chaucer's Prologue to
Canterbury Tales in Tamil

பேராசிரியர்
பழ.மணி



மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண்: 1447,
7 (ப.எண்: 4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை – 600 017.
தொலைபேசி: 24342926, 24346082
மின் அஞ்சல்: manimekalai1@dataone.in
இணைய தளம்: www.tamilvanan.com

நூல் விவரம்

நூல் தலைப்பு	நவீன கதைகளின் தந்தை சாசரின் சுவையான வர்ணனைகள்!
ஆசிரியர்	பேராசிரியர் பழ.மணி
உரிமை	ஆசிரியருக்கு
மொழி	தமிழ்
பதிப்பு ஆண்டு	2012
பதிப்பு விவரம்	முதற் பதிப்பு
தாளின் தன்மை	மேப்லித்தோ
நூலின் அளவு	டிமெளன் சைஸ் (12 X 18 செ.மீ.)
அச்சு எழுத்து அளவு	10.5 புள்ளி
மொத்த பக்கங்கள்	vi + 54= 60
இந்திய விலை	₹ 40/-
அட்டைப்பட ஓவியம்	ஓவியர் ஜமால்
லேசர் வடிவமைப்பு	ஸ்ரீ விஸ்னேஷ்வரா கிராஃபிக்ஸ், போன்: 9884513164.
அச்சிட்டோர்	ஸ்கிரிப்ட் ஆஃப்செட், செல்: 9551429203
நூல் கட்டுமானம்	எதுவம்

காணிக்கை

பூனாவில் உள்ள தகடுசேத் கணபதிக்கும்,
சித்தாள் தேவிக்கும்,
காசி விஸ்வநாதர் உண்அமர் விசாலாட்சிக்கும்,
நாசிக்கில் உள்ள கார்த்திக் சுவாமிக்கும்...

நன்றிக்குரியவர்கள்

1. பண்பாளர் திரு. ரவி தமிழ்வாணன் அவர்கள்,

2. திரு. மோகன் அவர்கள்,

மேலாளர், மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

3. என்னுடைய மாணவி எம்.கலா

4. திரு. வி.சரவணன், திரு. முருகன்,

5. திரு. எம்.நாராயணன்.

என்னுரை

சாசர் ஆங்கில இலக்கியத்திற்கு ஆற்றிய பணியை அளவிட்டுக் கூறமுடியாது. டான்டே இத்தாலிய மொழிக்கு ஆற்றிய தொண்டைப் போல சாசரும் ஆங்கில இலக்கியத்திற்கு தொண்டாற்றியிருக்கிறார். அவர் வாழ்ந்த காலத்தில் இங்கிலாந்தை ஃபிரெஞ்சு மொழி ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. 1362ஆம் ஆண்டில் தான் ஃபிரெஞ்ச் மொழி தன் ஆதிக்கத்தை இழந்து ஆங்கிலத்துக்கு வழிவிட்டது. ஆங்கிலம் கோர்ட்டில் வாதாடும் மொழியாக ஆக்கப்பட்டது. ஃபிரெஞ்ச் மொழியின் ஆதிக்கம் குறையத் தொடங்கியது.

சில எழுத்தாளர்கள் சாசரை ஆங்கிலத்தைப் படைத்தவர் (Chaucer, The creator of English) என்று அழைத்தார்கள். அவர் இலக்கியம் மூலம் மொழியை வளர்த்தார். அவரை ஆங்கில மொழியின் தந்தை 'The Father of English Language' என்றும் அழைத்தார்கள். அந்த அளவிற்கு அவர் ஆங்கில மொழிக்குத் தொண்டாற்றியிருக்கிறார்.

வைகிலிஃப் (Wycliff)ஐ மதச்சீர் திருத்தத்தின் விடிவெள்ளி என்று அழைத்தால் சாசரை 'மறுமலர்ச்சி' இயக்கத்தின் விடிவெள்ளியென்று அழைக்கலாம். அவரை ஆங்கிலக் கவிதைகளுக்குத் தந்தை என்றும் அழைப்பார்கள். (The Father of English Poetry). புதினம் (Novel) வளர வித்திட்டவர். புதினம் என்பது புதிதாக வந்தது. நாட்டுப்புறப் பாடல்கள், ஒழுக்கத்தைக் காக்க உதவும் மதவழிக் கவிதைகள்தாம் மக்களிடையே பிரபல்யமாக இருந்தன.

கற்காலம் தொட்டு இக்காலம்வரை வாலாறு எத்தனையோ மாற்றங்களைக் கண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக விஞ்ஞானம், மருத்துவம் போன்றவற்றில் மாற்றங்கள் நிறைய ஏற்பட்டுள்ளன. ஆனால் மனிதன் மட்டும் தன் அடிப்படைக் குணங்களிலிருந்து மாறவில்லை. ஆசை, ஆணவம், மதத்தின் பெயரால் காசாக்குதல், நேர்மை, வீரம், காதல், உழைத்து செய்தல், போன்ற பல்வேறு குணங்கள் அன்றைய மனிதர்களிடம் இருந்தன. இன்றும், மனிதர்களிடையே அத்தகைய குணங்கள் காணப்படுகின்றன. நேர்மையானவர்களையும், உழைத்து செய்பவர்களையும், தினசரி சந்திக்கின்றோம். இல்லையா ?

'பறவைகள் பலவிதம், ஓவ்வொன்றும் ஒருவிதம்.' மனிதர்கள் பலவிதம், ஓவ்வொருவரும் ஒருவிதம். அதை அற்புதமாக சாசர் வர்ணித்துள்ளார். படித்து ரசியுங்கள்.

அன்புடன்

மு. மணி

(மு. மணி)

முகவுரை

சாசரின் கேண்டர்பரி டேல்ஸ்
[தமிழில்]

கேண்டர்பரி யாத்திரை – ஒரு முகவுரை

வர்ணனை தொடங்குகிறது.

ஏப்ரல் மாதத்து மழைத்துளி மண்ணில் விழவிழ மார்ச் மாதத்து வறட்சி வறண்டே போனது. செடி, கொடி மரங்களின் நாளங்களில் உயிரூட்டும் ஈரப்பசை உள்ளே செல்லச் செல்ல பூக்கள் பூக்கத் தொடங்கும், காய்கள் காய்க்கத் தொடங்கும். கனிகள் கனியத் தொடங்கும், மேற்கத்திய இளங்காற்று வெண்சாமரம் வீச செடி கொடி மரங்கள் புத்துயிர் பெறும். இளஞ்சூரியன் அதன் பாதையில் பாதிச் சுற்றைக் கடந்துவர, இளம்பறவைகள் இரவு முழுவதும் இயற்கையின் அரவணைப்பில் இன்னிசை பாடும் இனிய பருவ காலமிது. இயற்கை அவற்றை நடத்தும் இந்த இனிமையான வேளையில், பல்வேறு நாடுகளிலிருக்கும் யாத்திரீகர்கள் புனிதத்

தலங்களை நோக்கிப் பனை ஓலையுடன் பயணம் செய்ய ஏங்குவது இயல்பே.

அவர்களோடு பாதேசிகளும் (Palmers) பயணம் செய்வர். (யாத்திரீகர்கள் திட்டமிட்டுப் பணத்துடன் பயணம் செய்வர். பாதேசிகள் அப்படியல்ல. கிடைக்குமிடத்தில் தங்குவர். கிடைப்பதைப் புசிப்பர். திட்டமிட்டுப் பயணம் செய்வதில்லை. குறிப்பாக, இங்கிலாந்தில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் புனிதத் தலங்களுக்கு பயணம் செய்ய விரும்புவார்கள். குறிப்பாக, கான்டர்பரிக்குச் சென்று வரவிரும்புவர்.

ஆசீர்வதிக்கப்பட்ட புனிதரின் ஆசியைப் பெற விரும்புவர். ஏனெனில் அவர்கள் உடல்நிலை சரியாக இல்லாதபோது அந்தப் புனிதர் அவர்களுக்கு உதவினார். (கேன்டர்பரியில் உள்ள புனிதர் என்பது இங்கு 'தாமஸ் பெக்கட்டை'க் குறிக்கும். பிரதான பாதிரியாராக இருந்த தாமஸ் பெக்கட்டுக்கும் அரசன் ஹென்றி II-க்கும் பகைமை ஏற்பட்டது. 1170இல் அவர் கொலை செய்யப்பட்டார். ஆகவே அந்த இடம் புனித இடமாக மாறியது. அவர்தான் இங்கு புனிதர் என அழைக்கப்பட்டுள்ளார்– கேன்டர்பரி பேராலயத்தில் அவர் கொலை செய்யப்பட்டார். ஏனெனில் ஹென்றி II ஐ ஆதரித்த மூன்று பாதிரியார்களை தாமஸ் பெக்கெட் மதத்தை விட்டுத் தள்ளி வைத்தார். அந்த மூன்று பேரும் ஹென்றி II இன் கொள்கைகளை ஆதரித்தவர்கள். ஆகவே நான்கு வீரர்களை அனுப்பினான். அவர்கள் தாமஸ் பெக்கட்டை, பேராலயத்தின் கதவுகளைப் பூட்டி, பேராலயத்திற்கு உள்ளே வைத்து கொலை செய்தனர்.

பேராலயத்திற்குள்ளே கொலை செய்யப்பட்டதால் அவர் தியாகியாகவும், புனிதராகவும் அருள் நிறைந்தவராகவும் கருதப்பட்டார். ஆகவே அந்த ஆலயத்திற்குச் சென்றால் நோய்கள் குணமடையும் என மக்கள் நினைத்தனர் ஆகவே அவ்விடத்தை நோக்கிப் புனித யாத்திரை செய்வது இயல்பே.)

அச்சமயம் நான் சௌதவாக்கில் உள்ள டாபர்ட் சத்திரத்தில் தங்க நேர்ந்தது. எனெனில் நான் மத நம்பிக்கையுடன் கேண்டர் பரிக்குச் செல்வத் தயாராக இருந்தேன். அந்நேரம் அங்கு பல தரப்பட்ட இருபத்தொன்பது பேர்கள் அங்கு வந்தனர்

அவர்களும் கேண்டாபரிக்குச் செல்லவே வந்திருந்தனர். ஆகவே, எல்லோரும் ஒன்றாகக் கூடினோம். (சத்திரத்திலிருந்த அறைகளும், குதிரைத் தொழுவமும் பெரியதாய் இருந்தன.) அங்கு உபசரிப்பும் நன்றாகவே இருந்தது.

சூரிய அஸ்தமனத்திற்கு முன் நான் அனைவருடனும் உரையாடினேன் அப்படி உரையாடியது அவர்களின் தோழமையான நட்பைப் பெறவே. எவ்வகையில் எழுந்து கேண்டர்பரிக்கு எல்லோருடனும் செல்ல ஒப்புக் கொண்டேன் அதைப்பற்றி நான் இப்போது உங்களிடம் சொல்லப போகிறேன் செவிமடுப்பீர். அவர்களை உற்று கவனித்து எடைப் போடுங்கள்.

இந்தக் கதையைத் தொடருமுன்பு எனக்கு நேரமும், அவசாசமும் இருப்பதால் யாத்திரீகர்களைப் பற்றி என்னுள் எழுந்த எண்ண அலைகளையும், அவர்கள தோற்றம எனக்குள் ஏற்படுத்திய உணர்வுகளையும், தாக்கத்தையும், அவர்களின் தொழிலைப்

பற்றியும், வகிக்கின்ற பதவியைப் பற்றியும், அணிந்திருந்த உடைகளைப் பற்றியும், இங்கு விவரிப்பது பொருத்தமெனவே நினைக்கின்றேன் அதிலிருந்தே அவர்களின் குணத்தை அறிந்து கொள்ளலாம்.

அரச வீரன் (The Knight)

முதலில் அரச வீரனைப் (Knight) பற்றி சொல்கிறேன். அக்குழுவில் அரச வீரன் ஒருவன் இருந்தான் அவன் தைரியமான வீரன் வீரனுக்கான அருகதை அனைத்தையும் படைத்தவன் அவன் முதன்முதலாக போர்க்களத்திற்குப் போனதிலிருந்து அவன் வீரச் செயல்களையும், உண்மையையும், நேர்மையையும், பெருந்தன்மையையும் உபசரணையையும் உள்மார விரும்பினான். அரசனுக்காகப் போரிட்டதில் வீரங்காட்டி தனித்தடயம் பதித்தவன் பல போர்களைச் சந்தித்தவன். கிறிஸ்துவர்களிலும், கிறிஸ்துவ மதத்தைச் சாராதவர்களிலும் அவனைப் போன்று போர்க்களங்களைச் சந்தித்தவர் எவருமில்லை. உன்னத குணத்திற்கும், தைரியத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாய்த் திகழ்பவன்.

அரசன் பீட்டர் 1365இல் அலெக்ஸான்ட்ரியாவைப் பிடிக்கும் போது போரில் பங்கேற்றவன் பிரஷ்யாவின் சிறந்த போர்வீரன் என்ற மதிப்பைப் பெற்றிருந்தான் வீரர்கள் அவனை கவுரவிப்பார்கள் லுதியானாவிலும், ரஷ்யாவிலும் அடிக்கடி அவனைப் போன்று போரில் கலந்து கொண்ட கிறித்துவ வீரர்கள் எவருமில்லை

கிரேனாடாவில் அலகி லிபாரைப் பிடிக்கும் போது பங்கேற்றவர்களில் அவனும் ஒருவன் பௌமேரியவிலும் அவன்

போரில் பங்கேற்றிருக்கின்றான். சைபரிஸ நாட்டு பீட்டர் அயானஸையும், அபிலிபையும் பிடிக்கும்போது போரில் பங்கெடுத்தவன் போர்க்களங்கள் பல கண்டவன் பெருங்கடலைச் (Great Sea) சுற்றி நடந்த போர்கள் பலவற்றில் தன் வீரத்தை நிலைநாட்டியவன்.

மிக ஆபத்தான போர்க்களங்களில் தன் வீர தீரத்தைக் காட்டியவன். மூன்று முறை கிறிஸ்துவ நம்பிக்கைக்காக ஒற்றைக் கொடுவர் போடும் சண்டையில் (Combat) மூன்று முறையும் கலந்து கொண்டவன். அம்மூன்று சண்டையிலும் எதிரியை வீழ்த்தியவன் இந்த வீரன் பாலேசியா அரசனோடு கிறிஸ்துவர் அல்லாத துருக்கிய ரோடு போரிடப் போனவன். அதில் இருந்து அவன் புகழ் மேலும் ஓங்கியது. அவன் வீரனாக இருந்தாலும் அவன் புத்திசாலி என்பதை மறுப்பதற்கில்லை. அவனது நடத்தை கன்னிப் பெண்ணின் கண்ணியமான நடத்தையைப் போல இதமாய் இருக்கும்.

முரட்டுத்தனமாகவோ, தடித்தனமாகவோ பேசமாட்டான். அவன் உண்மையான முழுமையான வீரன். அவனுடைய ஆடை அணிகலன்களைப் பற்றிச் சொல்கிறேன்.

அவனுடைய குதிரைகள் உயர்தரமான நேர்த்தியான குதிரைகள். அவனுடைய ஆடை கவர்ச்சிகரமாக இல்லை. மேலும், அவனுடைய உடை மென்மையானதாகவும் இல்லை. அவன் கவசம் அணிந்திருந்த காரணத்தால் அவனது ஆடையில் கறை படிந்திருந்தது. ஏனெனில் இப்போதுதான் அவன் வேறொரு போர்ப் பயணத்தை முடித்து விட்டு காண்டர்பரி யாத்திரை போக வந்திருக்கிறான் (உண்மையான வீரன் உடையைப் பற்றி அதிகம்

கவலை கொள்ள மாட்டான் (வீரனுக்கு முக்கியம் வீரமா ? இல்லை அணியும் ஆடையா ? என்ற கேளவி தொக்கி நிற்கின்றது.)

ஸ்கொயர் (The Square)

ஸ்கொயர் (Square) எனபவன் போர் வீரனுக்கு உதவியாக இருபபவன். போர் வீரனாக வருவதற்கு பயிறசி எடுத்துக் கொள்பவன். கேடயங்களையும், ஈடடியையும் தூக்கி வருவான். வறுத்த இறைச்சியை வெட்டிக் கொடுப்பான அவன் போர் வீரனாக வரவேணடும் என்று தணியாத மோகம் கொண்டிருந்தான இந்த ஸ்கொயர நான முனபு குறிப்பிட்ட போர் வீரனின மகன அவன் தலையில் சுருள் முடியுடன காணப்பட்டான அதுவும அச்சில் வார்த்தது போல் அழகாய் இருந்தது. அவனுக்கு இருபது வயது இருக்கும் நடுத்தர உயரம். சுறுசுறுப்புடனும், பலத்துடனும் காணப்பட்டான்.

இராணுவத்தில் பயிற்சி பெற்ற குறுகிய காலத்தில் பிளாண்டர்ஸ, ஆர்ட்டியஸ, பிக்காலி ஆகிய போர்களில் அவன் கலந்துகொண்டு குறிப்பிடும்படி வீர தீரச் செயலகளில் ஈடுபட்டான். ஆகையால் அவன் விரும்பும் பெணணின் மனதில இடம் பிடிப்போம் என நினைத்தான், நம்பினான்

அவன் சிததிரப் பினனல் போட்ட சட்டை அணிந்திருநதான் அது பச்சைப் புல்வெளியில் மலர்கள இருபபதைப போலக் காட்சியளித்தது.

அவன் பாடிக் கொண்டிருப்பான் அல்லது ஃபுளூட் (புல்லாங்குழல்) வாசித்துக் கொண்டிருப்பான். அவன் மே மாதத்தியப் பொலிவுடன் காணப்பட்டான். அவனுடைய மேலாடை உயரம் குறைவாகவும், கைப்பகுதி நீளமாகவும் காணப்பட்டது. அழகாய குதிரையில் அமர்ந்து நேர்த்தியாக சவாரி செய்பவன்.

அவனால் பாட்டை இயற்றவும் முடியும். பாடவும் முடியும். ஒற்றைக்கொருவர் போடும் வாள் சண்டையில் ஈடுபடுவான். அவனால் ஆடவும், சித்திரம் வரையவும், எழுதவும் முடியும். அவன் காதலைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பான். ஆகையால் அவன் இரவில் வானம்பாடியைப் போல கொஞ்ச நேரம் தான் தூங்குவான். நல்ல சுபாவம் கொண்டவன். அடக்கமானவன். நல்ல தொண்டாற்றுபவன். மேஜையில் அவன் தந்தைக்கு முன்பு உட்கார்ந்து வறுத்த இறைச்சியை துண்டு துண்டாக வெட்டுவான்.

இயோமேன் (The Yeoman)

இவன் மேலே சொன்ன வீரனுக்கு பணிவிடை செய்ய வந்திருந்தவன். அவன் சேவகர்களோடு சேர்ந்து இந்த யாத்திரைக்குச் செல்ல விரும்பவில்லை. இயோமேன் ஒரு கோட்டு அணிந்திருந்தான். அவன் தலையைச் சுற்றி கழுத்து வரை இருந்த தலை அங்கி பளிச்சிடும் பசசை நிறத்தில் இருந்தது. அவனிடத்தில் மயிலின் சிறகுகளால் செய்யப்பட்ட கூர்மையான அம்புகள் இருந்தன.

அவன் இடைக் கச்சைக்குக் (Belt) கீழே அவற்றை வைத்திருந்தான். அம்புகள் பிரகாசமாகவும், கூர்மையாகவும் இருந்தன. அவன் ஆயுதங்களை அற்புதமாகக் கையாள்வான்.

அவன் அம்பு விட்டால் அம்பு கீழே விழுவதைப் போல் மயில சிறகுகள கீழே விழாது. சிறகுகள் அப்படியே இருக்கும். அம்புகள் தாம் போய்த் தாக்கும். அவன் கையில் பெரிய வில இருந்தது. அவன தனது முடியை ஒட்ட வெட்டியிருந்தான. அவன் மாநிறமாய் இருந்தான். அவன் பேசும்போது மூக்கு வழியாகவும் ஓசை வெளிப்படும்.

அவன் மரவேலையைப் பற்றி நன்கு அறிந்தவன். கைகளில் கவசம் அணிந்திருந்தான். ஒரு பக்கம் வாளும். சிறிய கேடயமும் வைத்திருந்தான்.

கூர்மையான வாளானது கூர் ஈட்டியைப் போனறு இருந்தது. அதன் கைப்பிடி அழகாய் இருந்தது. அவனுடைய மாரபில புனித கிரிஸ்டபரின உருவம பொறித்த வெள்ளிச் சங்கிலி தொங்கியது. (ஏழை மக்களும் நடுத்தர மக்களும் அதை அணிந்திருந்தால் மறைந்து நின்று தாக்கும் தீமை விலகும் என்ற ஒரு நம்பிக்கை.) அவனிடம் ஒரு ஒலி எழுப்பும் சுருவி இருந்தது. அதனடி கைப்பிடியானது பசசை நிறத்தில் இருநதது. உண்மையான வன அதிகாரி என்று எனக்கு அவனைக் கண்டவுடனே தோன்றியது.

கன்னித் துறவி (The Nun)

அவள கனனி மடததில் வாழும் கனனி. அவள் தான அநத மடத்துக்குத் தலைவி. அவளும் எங்களில் ஒருத்தி. அவள் எளிமையானவள். அவள் புன்னகைத்தால் அழகாகவும். இனிமையாகவும இருக்கும். அவள் புனித லாப் மீது உறுதி எடுததிருந்தாள்.

அவள் எப்போதும் புனித லாட் மீதே உறுதிமொழி கொடுப்பவள். அவன் பெயரில் உறுதி எடுத்தால் உறுதிமொழி எடுக்கவில்லை என்றே எல்லோரும் அர்த்தம கொள்வர்

அவன் பெயர் மேடம் எக்ஸைனுடன அவள் தெய்வப் பிரார்த்தனைப் பாடல்களைத் தேவாலயத்தில் பாடும்போது கேட்க இனிமையாக இருக்கும். ஏனெனில் அப்பாடல்களைப் பாடும்போது சில ஒலிகள் சற்று மூக்கின வழியாகவும் வெளிவரும். பொதுவாக தேவாலய பாடல்கள அப்படித்தான் அமைந்திருக்கும். அவள் ஃபிரெஞ்சு மொழி நன்றாகப் பேசுவாள். அழகாகவும் பேசுவாள் ஸ்டாரிட்போர்ட் ஆட்போலில பேசும் பிரெஞ்சு மொழி அது. (ஆங்கில நாட்டில் ஃபிரெஞ்சு மொழி படிக்க வேண்டிய நிர்பந்த நிலை இல்லை). மாறாய் நாட்டில் பேசும் மொழியில் உள்ள ஃபிரெஞ்சு பேச்சு மொழி அவ்வளவாகத் தெரியாது.

உணவருந்தும்போது பின்பற்ற வேண்டிய நாகரீகத்தை அப்படியே முழுமையாகத் தெரிந்து வைத்திருந்தாள சாப்பிடும் போது ஒரு துளி உணவு கூட கீழே சிந்தாது சாஸ (Sauce) இருக்கும் கிண்ணத்தில் கையை விடமாட்டாள்.

உணவை எப்படி உண்ண வேண்டும் என்ற நாகரீகத்தை நன்றாகத் தெரிந்து வைத்திருந்த காரணத்தால் அவள உணவருந்தும் போது ஒரு துளி கூட மார்பில் விழாது அப்படி நாகரீகமாய் வாழத் தெரிந்தவள். உணவருந்தும் நாகரீகத்தை நவ நாகரீகப் பெண்மணி போல்ப பழகியிருந்தாள். கப்பில் உணவருந்திய பிறகு மேலே உதட்டைத் துண்டை எடுத்து நன்கு

துடைத்துக் கொள்வாள் ஏனெனில் அந்த இடத்தில் எவ்வித சாப்பிட்ட அடையாளமும் இருக்கக்கூடாது என்பதற்காக

உணவைச் சாப்பிட தன் கையில் எடுக்கும் போதும் அதை நேர்த்தியாக எடுப்பாள் அவள் கலகலப்பாய் இருப்பாள் பழக இனிமையானவள் சபைகளில் முறையாக நடந்து கொள்வாள். ஆகவே யாரும் அவளை எவ்விதக் குற்றமும் கூற முடியாது மரியாதைக்குரியவள் இதுவரை விளக்கியது அவளது வெள் நடத்தையை. இப்போது அவளது குணத்தை ஆய்வோம்.

அவள் தாமம் செய்வாள் இரக்க குணம் படைத்தவள். எலியானது எலிப்பொறிக்குள் மாட்டிக்கொண்டால் அவள் அழுவாள். அது இறந்தாலும். இரத்தம் சிந்தினாலும் அவள் கண்களில் நீர் வழியும் அவள் சில செல்லமான நாய்களை வைத்திருந்தாள். அவற்றிற்கு வறுத்த இறைச்சியைக் கொடுப்பாள் அந்த நாய் அடிபட்டாலோ அல்லது இறந்து போனாலோ விழுந்து விழுந்து அழுவாள். இரக்க குணத்திற்குத் தேவையான அனைத்து உணர்வுகளும் அவளிடம் இருந்தன

அவள் தலையங்கி மடிப்புக் கலையாமல் இருந்தது. அவளுக்கு அழகான மூக்கு கண்கள் சாம்பல் நிறத்தில் இருந்தன அவள் வாய்தான் சிறிது. அது சிவப்பாகவும், மென்மையாகவும் இருந்தது.

அவள் நெற்றிக்கு ஈடிணையில்லை. அது அகலமாய் இருந்தது. ஏறத்தாழ ஒன்பது அங்குல அகலம் இருந்தது. அவள் உருவமும் உடலுக்கு ஏற்றபடிதான் இருந்தது.

அவளது அங்கி சுதந்தமாய் இருந்தது. அவள் ஜெபமாலையை கையில் வைத்திருந்தாள். அது பச்சைப்பாசியால் ஆனது அதில தங்கத்திலான டாலர் தொங்கியது 'A' என்ற எழுத்து பொறித்திருந்தது. மேலும் அதில் 'அன்பு அனைவரையும் வெற்றி கொள்ளும்' என எழுதப்பட்டிருந்தது. அவள் உதவிக்கு கன்னித் துறவி ஒருத்தி உடன் வந்திருந்தாள். நிர்வாக உதவியாளராக ஒருவரும் வந்திருந்தாள் அவருடன் மூன்று பாதிரியார்களும் வந்திருந்தனர்.

சாமியார் (The Monk)

பாத்திரத்தில் ஒரு சாமியாரும் வந்திருந்தார் அவரது தொழில் மடத்தின் சொத்துக்களை கண்காணிப்பது. நிலங்களை கண்காணிப்பது. அவர் வேட்டையாடுவதில் அதிக நாட்டம் கொண்டவர்.

மடத்தின தலைமைப பொறுப்பை ஏற்று வகிக்கும் அளவிற்கு ஆளுமைத் தன்மை படைத்தவர் அவர் தொழுவத்தில் அதிக அளவு நேர்த்தியான ஆறாவல் மிக்க குதிரைகள் இருந்தன.

அவர் குதிரை மீது உடகார்ந்து காட்டுக்குள் வேகம் வந்தால் குதிரை கடிவாளத்தில தொங்கும் அந்தச் சிறிய மணிகளின் ஓசையானது காற்றோசையில கலந்து வேகமாக மக்களை வந்து அடையும அந்த சபதத்தை மக்கள் தங்குதடையின்றிக் கேட்க முடியும். அவ்வோசை தேவாலயத்திலிருந்து வரும் மணியோசையைப போல சப்தமாகவும், சுத்தமாகவும இருக்கும். அதை மக்கள கேட்க முடியும. அதை விரும்புவர் இந்த மாண்புமிகு சந்நியாசி சிறிய

மடாலயங் களுக்கு தலைமைப் பதவியில் இருந்தாலும் புனித மாரஸ்பீம் புனித பெனடிக்தும் கூட்டிய விதிகளை அவ்வளவாக மதிக்க மாட்டார் மடத்தின் விதிமுறைகளை மீறி நடப்பார்.

ஏனெனில், அவை பழமையான விதிமுறைகள் எனவும், கடுமையானவை எனறும் என்னுடைய நவீன வாழ்க்கை முறையைப் பின்பற்ற வேணடும என நினைப்பவர் வேட்டையாடும் சுகத்தை எதற்காகவும விட்டுக் கொடுக்கமாட்டார்

வேட்டையாடுதல் புனிதமறற செயல் என்று சொல்வதையும், சந்தியோசி மதவழி செலலவிலலையென்றால் அவர் உண்மையான சந்தியோசி இலலை என்றும் சொலலுவதை எலலாம் கடுமையாக எதிர்ப்பவர்.

பிறகொடிநத கோழியால் எதுவும் செய்ய முடியாது. அப்படித் தான் அவர் விதிமுறைகளை எடுத்துக் கொண்டார். அதாவது, பாதிரியாரகளைப் பற்றி சொலலும்போதும் அதைப் பின்பறறும் பாதிரியார்களையும் அவர் அப்படித்தான நினைதது்தார்.

சந்நியாசிகள் விதிமுறைகளை மீறும்போது அவர்கள தரம சஙகடத்திறகு ஆளாவாரகள் என்ற சொலலுக்கெல்லாம் அவர் அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

நான் அவரது எணணங்களைப் பாராட்டுகிறேன சந்நியாசி எநத நேரமும் மடத்துக் குள்ளேயே உட்கார்ந்து கொணடும், படித்துக் கொணடும தனனைத் தானே வருத்திக கொணடும், என் தன்னை கிறுகுகாகசிக் கொளள வேணடும ? புனித அகுஸ்டினைப் போல என்

அவர் உடல வருதது உழைக்க வேணடும்?'' எனறு நினைப்பவர் அவர. அதிகம் படிபபதாலும, அதிகம் உழைப்பதினாலும, உலகுக்கு என்ன லாபம்?' என நினைப்பவர்.

ஆகையினால் அவர் வேட்டையாடுவதையே தனது பொழுது போக்காகக் கொண்டிருந்தார் ஆம், அவர் உணமையிலேயே ஒரு வேட்டைக்காரர்.

அவரிடம பல வேட்டை நாய்கள இருநதன. அவை பறவைகளைப் போல வேகமாகப் பறக்கும முயலைத் தேடி வேட்டையாடுவது அவருக்கு இனிதாய இருநதாலும அதற்காக அவர் எதையும் குறபபார் ஆனால் அவர் அவரது ஆசையைத் துறக்க மாட்டார்.

சட்டையின் கைப்பகுதி மணிக்கட்டு இருக்கும் இடத்தில அழகாய் உயர்தர சிறகுகள் வைத்து தைக்கப்பட்டிருந்தன அவருடைய தலையங்கியில் (தலையையும், கழுதையும் மறைக்கும தலையணி) தாடைக்கு அடியில் இருக்கும் பகுதியை தங்க ஊசி குத்திக் கொண்டு இணைத்திருந்தார் அதன் இனனொரு பக்கத்தை மிகவும் எடுப்பான முடிச்சுப் போட்டு கட்டியிருந்தார். அதற்குப் பெயரே லவ்வர்ஸ நாட் (Lover's Knot)

(இவை மத விதி மீறல்கள் !) தங்கம் அணிபவர் தாலி பல அதற்கு அனுமதியில்லை.

2) Lovers Knot (பாதிரியார் போடக்கூடாத முடிச்சு)

தலை வழுக்கையாய் இருந்தது. கண்ணாடி போல பிரகாசித்தது. எண்ணெய் வழியும் முகம் போல் இருந்ததால் அதுவும் பிரகாசமாய் இருந்தது.

உடல் உருவம் ஒழுங்காய் இருந்தது. எறியும் சட்டியில் உள்ள நெருப்பைப் போல் அவர் தலையில் சூரியக் கதிர்கள் சுற்றிக் கொண்டிருந்தன.

அவருடைய காலணி அழகாய் இருந்தது. அவருடைய குதிரை நல்ல வடிவில் இருந்தது. இப்போது எந்தச் சந்தேகமும் இல்லை. அவர் ஒரு அழகான பாதிரியார்தான்.

சித்திரவதைப்பட்ட ஆவியைப் போல் அவர் வெளுப்பாயில்லை. இறைச்சி வகையில் அவர் முழுதாய் வறுத்தெடுத்த வாத்தை விரும்பிச் சாப்பிடுவார். பெரி பழத்தைப்போல அவரது குதிரை பழுப்பு நிறத்தில் இருந்தது.

சந்நியாசி (ஃபிரியர்) (The Friar)

அங்கொரு ஃபிரியர் (சந்நியாசி) இருந்தார். அவர் ஓர் உல்லாசமான பேர்வழி. அவர் பிச்சை எடுப்பதற்காக ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. அதாவது லிமிட்டர் (யாசிப்பவர்)களில் நான்கு தரவரிசை உண்டு. அவர்களில் யாரும் இவரைப் போல அரட்டை அடிக்க முடியாது. முகஸ்துதியும் அவரைப்போல யாரும் செய்ய முடியாது. அவர் தன் சொந்தச் செலவில் பல சன்னியருக்குத் திருமணம் செய்து வைத்திருக்கிறார். ஃபிரியர்களில் அவர் ஒரு முக்கியமான 'தூண்' என அழைக்கலாம்.

நன்கு பிரபலமானவர் நாடு முழுவதிலுமுள்ள பணக்காரப் பண்ணையார்கள் அவரை நேசித்தனர். நகரங்களிலுமுள்ள மதிப்புமிகக் பெண்களும் அவரை நேசித்தனர். பாவமன்னிப்பு கேட்கக் கூடிய அதிகாரம் அவரிடத்தில் இருந்த காரணத்தால், அதுவும் போப் கொடுத்த அதிகாரத்தால் பாதிரியார்களைக் காட்டிலும் அவரிடம் அதிக அதிகாரம் இருந்தது.

பாவமன்னிப்பை மிகவும் உற்சாகத்துடன் கேட்டுப் பாவத்தை எளிதாக மன்னித்துவிடுவார். அன்பளிப்பு அதிகம் கிடைக்கு மென்றால் அதிவிரைவில் மன்னித்து விட்டுவிடுவார்.

ஏனெனில் இதுபோன்று பாதிரியாருக்குக் கொடுத்தால் பாவம் போய்விடும் என நம்பினார்கள்.

இப்படி தாமங்கள் செய்தால் தவறு செய்தவன் தவறுக்காக வருந்துகிறான் என முழுதும் நம்பினார். கல் மனம் படைத்தவர்கள் கஷ்டத்திலும் அழமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களும் இவ்வுலகில் இருக்கிறார்கள். ஆகவே, கண்ணீர் விடுவதைக் காட்டிலும் பிரார்த்தனை செய்வதைக் காட்டிலும், இதுபோன்ற சந்நியாசி களுக்கு மனிதன் தர்மம் செய்வது நல்லது என எண்ணினார்.

அப்படி ஓர் சந்நியாசி அவர் தலையையும், கழுத்தையும் மறைத்திருக்கும் தொப்பியில் ஊசிகளும், கத்திகளும் சொருகப் பட்டிருக்கும். அவற்றை அழகான பெண்களுக்குக் கொடுப்பார்.

குரல் வளம் படைத்தவர் நன்றாக பாடுவார். ஃபிடில் (இசைக் கருவி) நன்கு வாசிப்பார். பிரபலமான பாட்டுகளைப் பாடுவதில் வல்லவர். எளிதில் அவரால் பரிசைத் தட்டிச் செல்ல முடியும்.

லிவலி (ஒரு வகை மலர்) போன்று அவாது கழுத்து வெள்ளையாக இருந்தது உடல் வலிமை கொண்டவர் எல்லா வூர்களிலும் உள்ள சதுரங்களைப் பற்றியும் பாரிவேலை பார்க்கும் கலைக்காரப் பெண்மணிகளையும் நன்றாக அறிந்து வைத்திருந்தார் கொலைப்போனால் அங்கு உள்ளவர்களை பெண் பிச்சைக்காரிகளைக் காட்டிலும் தொழுநோய்க்காரர்களைக் காட்டிலும் அதிகமாகவே தெரிந்து வைதிருந்தார் அவருடைய தகுதிக்கு, பதவிக்கு அப்படித் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர் களோடு பழகுவது பொருத்தமாய இருக்காது.

பணம் படைத்தவர்களிடமும் பெரிய வியாபாரிகளுடனும், லாபம் கிடைக்கும் இடத்திலும் மரியாதையாகவும் நடந்து கொள்வார். அடக்கத்தினை உறைவிடமாய்த் தெரிவிப்பார். இதுபோன்ற விஷயங்களில் அவருக்கு சரியாக யாரும் இருக்க முடியாது. அவர் வெற்றிகரமாக தன் தொழிலை நடத்தி வந்தார்.

செபினெட் ஜானுடைய (புனித நூல்) முதல் பகுதியை நன்றாகப் படிப்பார் ஒரு விதவை மிகவும் ஏழையாக இருந்தாலும் அவள் பிச்சை கேட்டால், பேட்டவுடன் தன்னிடம் இருக்கும் சில்லரையைக் கொடுத்துவிட்டுப் போய்விடுவார்

இப்படி வருகின்ற வருமானம் அவருடைய கூலியைக் காட்டிலும் அதிகமாய் இருக்கும். நாய்க்குட்டியைப் போல துள்ளிக் குதித்து விளையாடுவார் கோர்ட்டுக்கு வெளியே தன் தாவாக்களைப் பைசல செய்யும்போது மிகவும் தாராளமாய் இருப்பார் ஏழை அறிவாளியைப் போல சாதாரண உடையில காட்சி அளிக்கமாட்டார்

பாதிரியாரைப் போல எளிமையாகவும் இருக்க மாட்டார். பிரபுவைப போல அல்லது போப்பைப் போல உடை அணிந்திருப்பார் வழக்குத் தொடாந்தவரிடமும், கட்சிகாரர்களிடமும் அவர் தனனை முக்கியமான ஆளாகக் காட்டிக் கொள்ள அவா அப்படி உடை (மேலாடை) அணிந்திருப்பார்

அவரது உடை சலவை செய்யபபட்டிருக்கும. அதை எடுத்து அவர் அணிநது கொண்டால் அச்சில் வாாக்கப்பட்ட மனி தெரிவது போலத் தோன்றும அவர் பேசும்போது, சறறு செவறுகையாக குழந்தைகள பேசுவது போனறு தெரியும் ஹாாப (இசைக்கருவி) பை எடுத்து பாட்டுப் பாடினால தலையிலுளள கனைகள பனி விழும் இரவில் நட்சத்திரங்கள் மினனுவதைப் போன்று தோன்றும்.

வியாபாரி (The Merchant)

எபர் ஏரிபெர்ட என்ற ஒரு வியாபாரி அங்கு இருந்தான. அவன் குறுந்தாடி வைத்திருந்தான். பல வணணங்கள கொணடிருந்த ஆடையை அணிநதிருந்தான அவன் குதிரை மீது அமர்ந்திருந்தான் அவனுடைய தலையில் பிலெமிஸ் என்ற ஒருவகைத் தொப்பி அணிந்திருந்தான். அவனுடைய எண்ணஙகளை மெதுவாகச் சொல்வான அவனுடைய வாபத்தைப் பற்றி பேசும்போது உரத்த குரலில் பேசுவான கடற்கொள்ளையர்கள் அபாயத்திலிருந்து தப்பிக்க மிடில்பர்க்கிலிருந்து அர்வெல் நதி வரை கடற்கரை காக்கப்பட வேண்டுமென எண்ணினான் பேரம் பேசி தனனுடைய சரக்குகளை ஃபிளெமிஷ நாணயத்திறகு மாற்றுவதில அதிகத் திறமை படைத்தவன்

அவனைக் குழப்பத்திலோ தவிப்பிலோ பார்க்க முடியாது அவனுடைய புத்தியை அப்படி அலைபாய விடாது வைத்திருந்தான் அவனது வியாபாரத்திலோ, பேரம் பேசி விற்பதிலோ, கடன் வாங்கியிருப்பதிலோ இருந்து அவன் கடன் கமையில இருக்கிறான என்று யாரும் சொல்ல முடியாது. தெரிந்து கொள்ளவும் முடியாது. அவன் உண்மையிலேயே ஒரு தகுதி படைத்த மனிதன் உண்மையிலேயே அவன உண்மைப் பெயர் என்னவென்று எனக்குத் தெரியாது.

கிளார்க் (The Clerk)

ஆக்ஸ்ஃபோர்டைச் சோந்த அறிவாளி மாணவன ஒருவன வந்திருந்தான அவனிடம் ஒரு குதிரை மெல்லிய நூலைப் போல இளைத்து இருந்தது அவனை குண்டானவன என்று சொல்ல முடியாது கனனம் குழி விழுந்து இருந்தது தன்னடக்கமும் சுய கட்டுப்பாடும், அவனிடமிருந்தன அவனுடைய மேலாடை பழையதாய் இருந்தது ஏனெனில் இன்னும் தேவாலயத்தில் அவனுக்கு பதவி கிடைக்கவில்லை. வேலை பெறும் அளவிற்கு அல்லது வாங்குவதற்கு அவனிடம போதுமான உலக அனுபவம் இலலை அதற்குப் பதிலாக கறுப்பு சிவப்பு அட்டை போட்ட அரிஸ்டாட்டிலின் புத்தகத்தை வாங்கி தன தலையருகே வைத்து இருப்பதையே விரும்புவான் இசைக் கருவிகளான ஃபிடில், ஹார்ப் (ஒருவகை இசைககருவி) ஆடம்பரமான உடைகளை வாங்குவதைக காட்டிலும புத்தகம வாஙகுவதையே விரும்புவான் அவன் தத்துவ ஞானியாக இருந்தாலும் அவனிடம் அதிகம் பொற்காககள் இல்லை. மாறாக, கறபதிலும் படிபபதிலும காலத்தைச் செலவிட்டான் அப்படிப் படிப்பதற்கு புத்தகம் வாங்க எநத

நண்பர்களுக்கு பணம் கொடுத்தால் அவர்களுக்காக பிராத்தனை செய்து கொள்வான் கவனமாகவும் அறிவுக் கூர்மையுடனும் புதுதகவல்களைப் படிப்பான் அளவுக்கு மீறி ஒரு வார்த்தை கூட பேச மாட்டான். தேவையிலலாமல ஒரு வார்தத்தை கூட வீண் பேச்சு (வார்த்தை) பேச மாட்டான். தேவையான இடத்தில் பொருத்தமாகவும், மரியாதையுடனும் பேசுவான் அவன பேசுவது அழகாக இருக்கும. உயிரோட்டமுடையதாய் இருக்கும அவனது பேசசில் உன்னதமான எண்ணங்கள் காணப்படும. அறுதது முடிவுடையதாகவும் இருக்கும கண்ணியமானவைகளாகவும் இருக்கும் கற்பதிலும், கறறுக் கொடுப்பதிலும் அதிக ஆர்வம் காண்பான்

சார்ஜன்ட் (The Sergent of Law)

இவன் அதிக அளவு சட்டம் படித்த முதிர்ந்த வயதுடைய ஒரு சட்ட அதிகாரி அவன் எப்பொழுதும் கவனத்துடன இருக்கும் புத்திசாலி. சட்ட நிபுணர்களை கூடுமை இடதுதிறகு அதிகம் சென்றுள்ளான். அவன தொழிலில் மிகவும் திறமை வாய்ந்தவன புதுதிசாலி மரியாதைக்குரியவன

அதற்குக் காரணம் அவனுடைய வார்த்தைகளில் கருத்தும், புத்திசாலிதனமும் சேர்நதே இருக்கும். கவுன்டி (மாவட்டம்) மாதிரி இருகுகும் இடங்களில சில சமயங்களில் பலதரப்பட்ட வழகுகு களையும எழுதது வாதாடுவான் ஆனகயால வழகுகறிஞராக அரசனின ஆணைக்குக் கட்டுபபடடு இரும்பான அரசு தரப்பு வக்கில் பேசும்போது கண்டும காணாதது போல இருபபான

அவன் கட்சிக்காரர்களிடம் பணம் பெறுவதோடு மட்டுமில்லாமல் அவன் வழக்கமாக அணியும் வக்கீலின் உடையையும் யாராவது அன்பளிப்பாகக் கொடுத்தால் வாங்கிக் கொள்வான, உடையையும், பணத்தையும் அதிகம் வாங்கிக் கொள்வதே அவனது வாடிக்கை.

நிலங்களை வாங்கி வளைத்துப் போடுவதில் அவனுக்கு நிகரான ஆள் அங்கு எவருமில்லை. வில்லங்கமில்லாத இடமாகப் பார்த்துத்தான் வாங்குவான்.

அவன் வாங்கிய நிலங்கள் எந்த கோர்ட்டுக்குப் போனாலும் செல்லும். அப்படிப்பட்ட இடங்களை வாங்குவதில் கைதேர்ந்தவன்.

அவன் எந்த நேரமும் கறுகறுப்பாக இருப்பான். ஆனால் இளனும் கொஞ்சம் அதிகமாக கறுகறுப்பாக இருப்பதாக வெளி உலகிற்குக் காட்டிக் கொள்வான்.

அரசன் வில்லியம் கான்கொயரர் ஆட்சி செய்த காலத்திலிருந்து எற்பட்ட சட்ட நிகழ்வுகளையும், நீதிபதிகளின் தீர்ப்பையும், வழக்கின் தன்மையையும் மேற்கோள் காட்டுவான்.

அவ்வளவு திறன்மிக்க வழக்கறிஞன் அவன் ஒரு பத்திரம் எழுதினால் அதில் தவறுகாண முடியாது. எழுத்துத் திறன் கொண்டவன், அனுபவம் மிக்கவன் என்பதால் அதில் எந்தப் பிழையையும் காண முடியாது.

அவனது ஞாபக சக்தியிலிருந்து எந்தச் சட்டத்தையும் அவனால் மேற்கோள் காட்ட முடியும்.

அவன் சவாரி செய்யும்போது பலவகை வண்ண நிறமுடைய சடையை அணிந்திருப்பான். மற்றவர்கள் கவனத்தை ஈர்க்க முயற்சி செய்யமாட்டான்.

அவனுடைய மேலுடை பட்டால் அமைந்திருக்கும். அதில் சில கோடுகள் இருக்கும் அவனுடைய ஆடையைப் பற்றி நான அதிகம் விமர்சிக்க விரும்பவில்லை.

ஃபிராங்க்ளின் (The Franklin)

ஆசு நிலத்தில் வாடகை கொடுக்காமல், எவ்வித நிர்பந்த முமில்லாமல வாழும் வாடகைக்காரன் அவனுடைய தாடி வெண்ணிற டெயிசி (ஒருவித மலர்)ப் போல இருக்கும்.

சிவந்த நிற மேனி உடையவன். காலைபில் எழுந்ததும் ரொட்டியை ஒயினில் (ஒருவகை மதுபானம்) நனைத்துச் சாபபிடுவது அவனுக்குப் பிடிகுரும். சுகமாக வாழ நினைப்பவன

ஏனெனில் அவன் எப்பிக்கோரஸின் கொள்கையைப் பின்பற்றுபவன் (எபிக்கோரஸ சுகமாக, வாழலை அனுபவிப்பது தான சுலபமான கடமை எனச் சொன்னவன் வாழ்வில வேறொன்றும் இல்லை. சுகத்தை அனுபவிப்பதுதான வாழ்வின சருதோடிம் எனச் சொன்னவன்) அவனுக்கு நகரில் ஒரு வீடு இருந்தது. அது அழகான, அருமையான வீடு.

வீட்டிற்கு வருபவர்களை நன்கு உபசரிப்பவன புனித ஜூலியனைப் போல வீட்டுக்கு வருபவர்களை நனகு வரவேற்று

உபசரிப்பான அவன வீட்டிலிருக்கும் ரொட்டியும், மதுவும் உயர்ந்த தரம் வாய்ந்தவையாக இருக்கும்.

மேலும், அங்கு இறைச்சி, மீன், வறுக்கப்பட்ட இறைச்சித் துண்டுகளைத் தாராளமாக வைத்திருப்பான. அதைப்போல வேறு யாரும வைத்திருக்க முடியாது.

மனிதர்கள விரும்பும் விதவிதமான ருசியான உணவு வகைகளுக்கு அங்கு பஞ்சமே இல்லை

இறைச்சி வகைகளை பருவ மாற்றத்துக்குத் தகுந்தவாறு மாற்றி தன் வீட்டில வைத்திருப்பான் அவனுடைய குட்டையில் விதவிதமான மீன்களை வளர்த்து வைத்திருந்தான

வகை வகையான பறவைகளை கூண்டுக்குள வைத்து வளர்த்து வருவான. எத தேவையோ அதை எடுத்து ருசியாக சமைத்துச் சாப்பிடுவான்.

சாஸ் (Sauce) (தொட்டுக் கொள்ள வைத்திருப்பது) ருசியாக சமைக்காமலிருந்தால் சமையல்காரனைப் பிடித்து ஒரு காய்ச்சு காய்ச்சி விடுவான்.

உணவருந்தும நாற்காலியை ஹாலில் வைத்திருப்பான. ஆகவே, எந்நேரமும யார வந்தாலும சாப்பிடலாம்.

நீதி சபையில் அவனதான் பிரபுவாக இருப்பான் அவனுடைய தொகுதிக்கு (County) அவன்தான் பிரதிநிதியாக இருப்பான

வாளும், பட்டுப் பையும் அவனுடைய பெல்டில் தொங்கும். பெல்ட் பாலைப் போல் வெண்மையாக இருக்கும். அவன்தான அங்கு ஷெரிட் (Sheriff - பணம் வசூலிப்பவன், கணக்கும் பார்ப்பவன்) அவனைப் போல ஆட விசுவாசி அங்கு வேறு எவருமில்லை.

சிறுசிறு வியாபாரிகள் – தொழில் செய்பவர்கள் (The Heberdasher, The Carpenter, The Weaver, The Dyer and the Tapestry-maker)

சிறு சிறு பொருட்களை விற்கும் அல்லது செய்யும் வியாபாரிகள் ஆடசாரி, நெசவாளி, வண்ணம் பூசுபவர், சும்பளம் பின்னுபவர் ஆகிய்யோரும் கூட இருந்தனர்

அவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான சீருடை அணிந்திருந்தனர் அவர்கள் அனைவரும் நன்றாகத் தைக்கப்பட்ட ஆடையை அவை செய்து போட்டிருந்தனர்

அவர்கள் கத்தியின் உறை செம்பினால் ஆனதல்ல. அவை வெள்ளியால் ஆனவை. அதை நன்கு துடைத்து வைத்திருந்தனர்

அவர்களை அணிந்திருந்த பெல்டில் இருந்த சிறு பையும் மாட்டியிருந்த கத்தியும் தரமானவையாக இருந்தன

ஒரு சங்கத்தின் மேடையில் அமர்ந்து பேசக்கூடிய தகுதி உடையவர்கள். அவர்கள் அறிவு நகராட்சி அதிகாரிகளுக்கு இருக்கும் அளவுக்கு இருந்தது.

அவர்களுக்கு போதுமான பணமும், வருமானமும் இருந்தன. அவர்களின் மனைவிகளும் அதை விரும்பினார்கள்

அப்படி இருந்தால்தான் அவர்களை மேடம் என அழைப்பார்கள் அப்படி அழைக்கப்படவில்லையென்றால் அவர்கள் வருத்தப்படுவார்கள அப்படிச் செல்வ நிலையில் இருந்தால் தான் மேடம் எனறு அழைத்து வந்து ஊரில் நடக்கும் திருவிழாக்களில் வீதி உலாவில் முன்வரிசையில் அமர்ந்து தலைமை தாங்கச செல்வார்கள்.

அவர்களது ஆடைகள, அணிகலனகளை ஒரு அரசியைப் போல வேலைக்காரர்கள தூக்கி வருவார்கள.

சமையல்காரன் (The Cook)

அவர்களோடு ஒரு சமையற்காரன இருந்தான் அவன் அவர்களுக்கு அந்த யாத்திரையில போது சமைத்துக் கொடுப்பான்.

முளை, எலும்பு கோழிகளையும வேறுவகை உணவுகளையும் மணக்க மணக்க ருசியாக சமைப்பான. சாப்பிட ருசியாக இருக்கும்.

அவன் லண்டன ஓயினை நனகு விரும்புவான் எப்டீவ் (மாமிச உணவுவகை) இனனொரு வகையான மாமிச உணவையும் சமைபபான் மாமிசதனை கேக கைத்து வறுப்பதிலும் அவன கெட்டிக்காரன்.

அவன் பிக்ளி (கால் மாமிச உணவு) நன்கு சமைப்பான் வகை, வகையான வாசனைப் பொருட்களைப் போட்டு கோழியை வறுப்பதில் திறமைசாலி. இதில் பரிதாபம் எனனவெனறால் அவனுக்கு காலின் அடிப் பாகத்தில் புண் உள்ளது.

மாலுமி (The Sailor)

ஒரு மாலுமியும் அங்கிருந்தான். அவன் மேற்கு திசையிலுள்ள நாட்டிலிருந்து வந்திருந்தான். தென்மேற்கிலுள்ள டாரட் மவுத் (துறைமுகம்)த்திலிருந்து வந்திருக்க வேண்டும். கனமான சக்தி மிக்க குதிரையில சவாரி செய்து வந்திருந்தான்.

அவனுக்கு குதிரை சவாரி அவ்வளவாகத் தெரியாது. அவனுடைய மேலங்கி கனமாகவும், முழங்கால் வரை நீண்டும் இருந்தது.

கழுத்தில் கயிறொன்று கட்டி அதில அவன் தன வாளைச் சொருகி வைத்திருந்தான். அவனுடைய மேனி வண்ணம் கடும் வெயிலால் செம்பட்டை (பழுப்பு) நிறத்தில் இருந்தது.

அவன் நல்லவன் சந்தேகமில்லை. போடெக்ஸிலிருந்து வரும் வியாபாரிகள் தூங்கும்போது அவர்கள் கொண்டு வரும் ஒயினை மது பானத்தை அடிக்கடி திருடிக் குடிப்பான்.

மனச்சாட்சியின் குரலுக்கு செவி சாய்க்க மாட்டான். அவன் எதிரிகளோடு சண்டையிட்டு வெற்றி பெற்றால் தோற்றவனைக் கடலில் தூக்கியெறிந்து விடுவான். தொழிலைப் பொறுத்தவரை அவன் கில்லாடி. கடல அலையின வேகம் நீரோட்டம், காற்றடிக்கும் திசை ஆகியவற்றைக் கச்சிதமாகக் கணக்கிட்டு, நிலவைப் பார்த்து ஒரு முடிவுக்கு வந்து கப்பலைக் கரை சேர்ப்பதில் ஹர்ல் (பார்கசே) இலிருந்து சார்த்தேறி வரை அவனுக்கு ஈடாக யாருமில்லை.

அவன் முரடன ஆனால் கெட்டிக்காரன் அவனுடைய தாடியை எத்தனையோ பேரவைகள அசைத்து ஆட விட்டிருக்கின்றன அவனுக்கு ஆடியிருக்கிறது. காட்லாண்டிலிருந்து கேபபினிஸ்டிரி வரை எல்லாத் துறைமுகங்களையும் நன்றாக அறிந்து வைத்திருந்தான்.

பிரிட்டனிலும், ஸ்பெயினிலும் உள்ள எல்லாத் துறைமுகங்களையும் தெரியும் அவனுடைய கப்பலின் பெயர் மேடலைவி.

மருத்துவர் (The Doctor of Medicine)

எங்களோடு ஒரு மருத்துவரும் வந்தார் அறுவை சிகிச்சை பற்றியும், மருந்தை பற்றியும் வேறு யாரும் அவரை விட ஆதாரப் பூர்வமாகப் பேச முடியாது. ஏனெனில் அவர் வான சாஸ்திரம் படித்தவர்.

நட்சத்திரங்கள ஒரு மனிதனை எப்படித் தாக்கும் என்பதையும் தெரிந்து வைத்திருந்தார். கோளங்களில நட்சத்திரம் இருக்கும் இடத்தை நன்கு பார்த்து பொருந்திய நேரம் பார்த்து மருந்தொன்றுக் கொடுப்பார்.

பொருந்திய மருந்தை, வாரணத்தை நேரம் பார்த்துக் கொடுப்பதில் கெட்டிக்காரர் அந்த நிவாரணி நன்கு வேலை செய்யும்.

ஒவ்வொரு நோய்க்கும் உள்ள காரணத்தை அவர் நன்கு அறிவார் அது வெப்பத்தால வந்ததா அல்லது குளிர்ச்சியினால்

வந்ததா ஈரத்தால் வந்ததா அல்லது உலர்வால் வந்ததா எனபதையெல்லாம் நனகு அறிந்து வைத்திருந்தார்.

அனுபவமிக்க திறமையான மருத்துவர் நோயின் காரணமறிந்து நோயாளிகளுககு காலமறிந்து சரியான மருந்தைக் கொடுப்பார்,

எல்லா மருந்துக கடைக்காரர்களும அவர் சொலலும மருந்தை எப்போதும் கைவசம் வைததிருப்பார்கள் ஒருவருக்கொருவா அதில லாபமடைந்தனர் அவாகளின உறவு நிரநதரமாகவே இருந்தது.

ஆகனி காளி காலபில, டிஸகோரைடஸ, ஹிப்போகிரைட்ஸ, ஹேலி, காலன் சொரப்பியன் நாளன், அவிசீனிலா அவரோஸ், டோமசீசிர் கானஸ்டனடைன் பெர்னார்ட், காடிஸ்டென, கில்பெர்ட் போன்ற பழங்கால மருத்துவர்கள் எழுதிய புத்தகங்களை எலலாம் நன்கு படித்து வைத்திருந்தார் மிதமாகச் சாப்பிடுவார் அளவுக்கு மீறி எதையும சாபபிட மாட்டார்.

ஊட்டமுளள எளிதில் ஜீரணிககக் கூடிய உணவையே உண்பார் பைபிளைப் பற்றி அதிகம் தெரியாது அவர் மருத்துவர் என்பதால தெய்வத்தின மீது அவ்வளவு நம்பிக்கை கிடையாது.

அவா ஆடை இரத்தச் சிவப்பில இருந்தது அதில் சாம்பல் நிறமும் கலந்திருந்தது சில்க் டாபெட் பட்டினால் கறை போடப் பட்டிருந்தது.

பணத்தைச் செலவழிப்பதில் கவனமாக இருப்பார் பிளேக், எபிடெமிக் போன்ற நோய்கள் பரவியிருந்தபோது அவர் சம்பாதித்த பணதைதைச் சேர்த்து வைத்திருந்தார்

பொன மருத்துவத்திற்கு முக்கியமானது. இதயத் துடிபனை சீராக வைத்திருக்கும் ஆகையால அவர் பொனனை அதிகம் விரும்புவார்.

மனையாள் (The Wife of Bath)

பாத் எனும் ஊருக்கு அருகிலிருக்கும் இடத்திலிருந்து ஒரு மனையாள் வந்திருந்தாள் அவளுக்கு காது சறறு பந்தம அதில் இரக்கப்பட வேண்டிய ஒன்று.

ஆடை நெயவதில் அவளுக்கு ஈடு இனை யாருமில்லை. எப்ரஸ், சென்ட் ஆகிய ஊர்களில் வாழபவர்கள் நெசவுத் தொழிலுக்குப் பேர்போனவர்கள். அவர்களைக் காட்டிலும் தனி நன்றாக நெய்வாள்.

அந்த வட்டாரத்தில் அவருக்கு முன யாரும போட உண்டியல் பெட்டியல் காணிக்கை செலுத்தினால அவளால் அதைத் தாங்க முடியாது. அப்படி யாரும சென்று செலுத்தினால் பொறுமையிழந்து தர்ம சிந்தனையை இழந்து கோபப்பட்டு விடுவாள்

அவளுடைய கைக்குட்டை அழகாக நெய்யபட்டிருந்தது. ஆனால ஞாயிறறுகிழமை அனறு தலையில் அணிந்திருக்கும் கைக்குட்டை 10 பவுண்ட் இங்கிலாந்து நாடடு நாணயம்)

மதிப்புடையது என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும் அவள் காலுறை செம்பட்டை நிறத்திலிருந்தது.

அவளுக்கு அது தகுந்ததாயிருந்தது. அவளுடைய உடல் அழகாகவும் மிருதுவாகவும் இருந்தது.

அவள் முகத்தில் துணிச்சல் காணப்பட்டது. அதில் பொலிவும் சேர்ந்திருந்தது. அது சிவப்பு நிறத்தில் இருந்தது. அவள் மதிக்கத் தக்க நிலையில் வாழ்ந்து வந்தாள்

அவளுக்கு ஐந்து கணவன்மார்கள். அத்தனையும் தேவாலயத்தில் தான் நடந்தது. அதுபோக இளமைக்காலத்தில் இருந்த காதலர்கள் வேறு யாரென்று சொல்ல இயலாது. அதைப்பற்றி இங்கு கூறுவது தேவையற்றது

ஜெருசலத்திற்கு மூன்று முறை போய் வந்திருக்கிறாள். பல விநோதமான ஆறுகளைக் கடந்திருக்கிறாள் அவள் ரோமுக்கும் பாலகானுக்கும் போய் வந்திருக்கிறாள். அங்கு உள்ள கலிகாவில் புனித ஜேம்ஸ் ஆலயத்தைப் பார்த்து வந்தவள் கலிசியாவிற்கும் போய் வந்திருக்கிறாள்

அதிகம் பயணம் செய்த காரணத்தால் அதிகம் கற்றிருந்தாள் பட்டறிவு நிறைய. உண்மையைச் சொன்னால் அவள் பற்களுக்கு நடுவே நிறைய இடைவெளிகள் காணப்பட்டன

அவள் நிதானமாகச் செல்லும் குதிரை மேல் அமர்ந்திருந்தாள் அவள் தலையில் கேடயம் அளவிற்கு உள்ள தொப்பி அணிந்திருந்தாள். அவளின் பெரும் இடையைச் சுற்றி ஸ்கர்ட்

ஆடை அணிந்திருந்தாள் அவள் கால்களில் சிறிய சிறகுகள் வைத்திருந்தாள்.

அவளால சிரிக்கவும் முடியும், சிரிக்க வைக்கவும் முடியும் அவள காதல் வசீகரத்தைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்தாள் ஏனெனில் காதல் விளையாட்டில கைதேர்ந்தவள்.

பாதிரியார் (The Poor Person)

ஒரு நல்ல மத குருமாரும் எங்களுடன வந்தார் அவர் ஓர் ஏழைப் பாதிரியார் நகரத்தில வாழ்ந்து வந்தார் ஆனால புனிதச் சிந்தனைகள வளமாக அவரிடம் குடியிருந்தன

புனிதக் காரியங்களில ஈடுபடுவார் அவர் கற்றறிந்தவர், அறிவாளி.

கிறித்துவரின் புனித போதனைகளை உளமார, உண்மையாக மக்களுக்குப் போதனை செய்வார் அன்பான இதயம கொண்டவர் உண்மையாக உழைப்பவர் பாதகம வரும்போது மிகவும் பொறுமையாக இருப்பார்

அவருக்குச் செலுத்த வேண்டிய காணிக்கை (1/10 பத்திலொரு பங்கு) செலுத்தத் தவறினால அவரை மதத்தை விட்டுத் தள்ளி வைக்க விரும்பமாட்டார் பதிலாக தன் கையிலிருந்தும, வருகின்ற காணிக்கைகளிலிருந்தும் அவருக்காகத் தான் செலுத்துவார்.

அவரிடம் இருந்த சொற்பப் பணம் அவருக்குப் போதுமானதாக இருந்தது. அவருடைய வட்டம் பெரிய வட்டம். அங்கு வீடுகள் ஒன்றுக்கொன்று அருகாமையில் இல்லை.

ஒரு வீட்டிற்கும், மற்றொரு வீட்டிற்கும் இடையே நீண்ட இடைவெளி இருந்தது. அதற்காக அவர் தன் கடமைகளிலிருந்து சிறிதும் தவறமாட்டார். யாரேனும் உடல் நலம் குன்றியிருந்தாலோ, துயரத்தில் ஆழ்ந்திருந்தாலோ, பணக்காரராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும், மழை பெய்தாலும், இடி இடித்தாலும் தவறாது சென்று அவர்களுக்காக பிரார்த்தப்பார். அவர் பாகுபாடு எதுவும் பார்க்க மாட்டார்.

ஏழையாக இருந்தாலும் பணக்காரராக இருந்தாலும் நடந்தே சென்று அவர்களுக்கு ஆறுதல் சொல்வார். போதனை செய்வதை செயல்படுத்திக் காட்டுகின்ற உண்மையான பாதிரியார்.

ஆகவே, அவர் ஓர் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். அவரை பிளிலிருந்து பொருத்தமான வார்த்தைகளை எடுத்து மேற்கோள் காட்டுவார். மேலும், இந்த வரிகளைச் சேர்த்துச் சொல்வார் "தங்கம் துருப் பிடித்தால் இரும்பு என்னாவது?" என்று கேட்பார். மேலும், மக்கள் நம்பிக்கைக்குரிய பாதிரியார்களே நம்பிக்கை இழந்தால் சாதாரண மனிதனின் ஆத்மா என்னாகும்? என்ற வினாவையும் எழுப்புவார்.

பாதிரியார்கள் மோசமாக நடந்து அவருடைய மக்கள் நாணயமாக நடந்தால் அதைக் காட்டிலும் கேவலம் வேறொன்றுமில்லை என நினைப்பவர். பாதிரியார் என்பவர் துய

வாழ்க்கை வாழந்து, மற்றவர்களுக்கு எடுத்துககாட்டாக இருகக வேணடுமென விரும்பியவர்.

தன் இருப்பிடத்தை வாடகைக்கு விட்டுவிட்டு, ஊர் சுற்றிக் கொண்டு, தனனுடைய மக்கள் பாவத்தில் சிக்கித் தவிப்பதை அவர் விரும்பமாட்டார்.

அதற்காக அவர் லண்டனில உள்ள புனித பால் தேவாலயத்திறுதப் போப் எளிதாய பணக்காராகளிடம சென்று பணம் கிடைப்பதை விரும்பியதிலலை. அதுவும செத்துப் போன பணக்காராகளுககாக தெய்வப் பாடலகளைப் பாடி பணம சம்பாதிப்பதை அவர் விரும்பவில்லை.

ஒரு குறிப்பிட்ட சங்கத்தினருக்கு பாதிரியராக வேண்டுமென என்றும் எண்ணியதில்லை. மாறாக, தன இடத்திலேயே அமர்ந்து தன் மக்களைக் காகக விரும்பி அவர் அங்கேயே தங்கி அவர்களின் நலம் பேணினார். மேலும் கிறித்தவ மதத்து எதிரிகளின் போதனையில் யாரும் விழுந்து விடாமல பார்த்துக் கொண்டார். அவர் மதசசார்பாளர் எனறாலும் உண்மையான துறவி.

அவர் உனனத எண்ணங்களுடனும் நற்செயல்களுடனும் வாழந்து கொண்டிருந்தாலும் பாவம் செய்பவர்களைப் பார்த்து வெறுக்க மாட்டார். அவருக்குக் காவம என்பது தெரியாத ஒன்று. அடக்கத்தின் மறு உருவம. மெதுவாகப் பேசுவார்.

அறிவுரை சொல்லும்போதும் வழிகாட்டும் போதும் இரக்கமாக இருப்பார். சொர்க்கத்தை அடைவதறகான வழியைக் காட்ட

விரும்பினார். நேர்மையான நன்னடத்தையைப் பற்றி கற்றுக் கொடுக்க விரும்பினார். சில சமயங்களில், யாராவது தவறான பாதையில் சென்றால் நறுக்கென்று திட்டுவார்.

அவர் மேல மட்டத்தைச் சார்ந்தவரா அல்லது கீழ் மட்டத்தைச் சார்ந்தவரா என்று பேதம் காட்டமாட்டார். அவரைக் காட்டிலும் நிச்சயமாக ஒரு சிறந்த பாதிரியாரைப் பார்க்க முடியாது.

அவர் மதச்சடங்கையோ மரியாதையையோ மக்களிடமிருந்து எதிர்பார்ப்பதில்லை. அவர் எண்ணத்திலகூட பிழை காண முடியாது.

அவரது வேலை கிறிஸ்துவின் போதனைகளையும், அவரது 12 சீடர்களின் போதனைகளையும் கற்றுக் கொடுப்பதே. அதில் என்ன குறிப்பிடத் தகுந்தென்னவென்றால், அவர் போதனைப்படி நடந்து காட்டினார்.

பிளோமேன் (The Plowman)

அந்தப் பாதிரியாருடன் ஒரு உழவன் இருந்தான். அவன் அந்தப் பாதிரியாருக்குச் சகோதரன். அவன் வண்டி வண்டியாக சாணத்தை ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்வான். அவன் உண்மையாக ஒரு நல்ல உழைப்பாளி. அமைதியுடனும், தாம் சிந்தனையுடனும் வாழ்பவன்.

அவன் கடவுளை நேசித்தான். அதுவும் உளமார்ந்த நம்பிக்கை வைத்திருந்தான். கஷ்ட காலங்களிலும், நல்ல காலங்களிலும் அவனது நம்பிக்கை அப்படியே மாறாமல் இருந்தது.

அவன் அண்டையில் வசிப்பவர்களையும் அவனைப் போலவே நேசித்தான. போரடித்து தானியங்களை எடுப்பான், கால்வாய்கள் வெட்டுவான். அதை கிறித்துவுக்கு அர்ப்பணிப்பானே தவிர, கால் காசு வாங்க மாட்டான். அதையும் ஏழைகளுக்காகச் செய்வான். அவன் 1/10 வருமானத்தையும், வருமானத்திற்கும், சொத்திற்கும் உரிய காணிக்கைகளை ஆலயத்திற்கு அவன் நேர்மையாகச் செலுத்துவான். அந்த வருமானம் நேர்மையான உழைப்பிலிருந்து வந்தது. அவன் வேலை செய்யும் போது அணியும் ஆடையையே அணிந்திருந்தான். அவன் ஒரு பெண் குதிரை மீது சவாரி செய்து வந்தான்.

அப்புனித பாத்திரைக் குழுவில் ஒரு மாவுமில் சொந்தக்காரர் (தானியங்களை அரைப்பவர்), மதநீதி மன்றத்திலிருந்து வந்த அதிகாரி ஒருவர். பண்ணையை மேற்பார்ப்பவர், தேவாலயத்தால் மன்னிப்புக் கொடுக்க நியமிக்கப்பட்டவர், ஒரு நிறுவனத்திற்கு சாமான வாங்குபவர் (சத்திரம் அல்லது சட்டக் கல்லூரிக்கு) மற்றும் நானும் இருந்தோம். வேறு எவரும் இல்லை.

மில்லர் (The Miller)

தானியங்களை அரைப்பவர் சற்று பருமனாக இருந்தார். சதைகள் உறுதியாக இருந்தன. ஒழுமையும் வலுவாக இருந்தது. அவருடைய உடல் வலிமையை எங்கு சென்றாலும் நிரூபித்து விடுவார். மல்யுத்தப் போட்டிக்குப் போனால் அவர்தான் வெற்றி பெறுவார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தாழ்ப்பாளைப் பிடித்து எந்தக் கதவையும் உடைத்து விடுவார் அவ்வளவு பலசாலி. தலையாலேயே (மோதிக்கூட) கதவை உடைக்கும் வலிமை படைத்தவர். நரியைப் போல அல்லது பனறியில் காணப்படும் முடிகளைப் போல அவரது தாடி சிவப்பாக இருந்தது. மண் வெட்டியைப் போல விரிந்தும் இருந்தது. அவருடைய நாசித் துவாரங்கள் பெரிதாகவும், கறுப்பாகவும் இருந்தன. அவற்றிலும் உரோமம் இருந்தது. அது பனறியின் மேல் வளர்ந்திருக்கும் முடியைப் போல இருந்தது.

ஒரு கேடயத்தையும் கத்தியையும் தூக்கிக் கொண்டு வந்திருந்தார். அவருடைய வாய் அடுப்பைப் போல அகலமாய் இருந்தது. அவர் ஓர் விளையாட்டுப் போவழி.

மோசமான கதைகளை அடிக்கடி சொல்வார். பெரும்பாலும் அவர் சொல்லும் கதை பாவம், ஒழுக்கமின்மை ஆகியவற்றைச் சார்ந்ததாகவே இருக்கும். அவர் திறமையானவர்தான் அதிர்ஷ்டக் காரரும்கூட. அரைப்பதற்கு உண்டான கூலியைக் காட்டிலும் அதிகமாக தானியத்தைத் திருட முடியும்.

வாடிக்கையாளர்களிடம் அவர் வழக்கமாக வாங்கும் கூலியைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாக வாங்குவார். இருந்தாலும் அவர் தெய்வ வாய் பெற்றவர். தங்க விரலோடு பிறந்தவர். அவருக்குத் திருட வேண்டிய அவசியமில்லை. வளமாகவும் வசதியாகவும் இருந்தார். அப்படியும் சொல்ல முடியும். இல்லையென்றால் இப்படியும் விளக்கலாம்.

தங்க விரலோடு ஒருவன பிறக்க முடியாது என்பதால் அவர் நேர்மையான அரைப்பாளி இல்லையென்றும் சொல்லலாம். (தானியங்களை அரைப்பதில் களவு செய்யக்கூடியவர் என்பதை சொல்லாமல் சொல்கிறார்)

வெள்ளை மேலாடை அணிந்திருந்தார் பேகபைப் (இசைக் கருவி)ரை நன்றாக வாசிப்பார் அதை வாசித்துக் கொண்டே எங்களை நகருக்கு வெளியே கூட்டி வந்துவிட்டார்

மான்சிபல் (The Manciple)

(ஒரு சட்டக்கல்லூரியில் சாதாரண வேலை பார்ப்பவர்) அவனும் இங்கு வந்திருந்தான் அவன கெட்டிக்காரத் தனமாக சாமான்களை வாங்குபவன் மற்றவர்கள் அவனைப் பார்த்து எப்படி சாமான்களை வாங்குவதென்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

கடனாக வாங்கினாலும் காக கொடுத்து வாங்கினாலும் அவனேதான் அதில் லாபம் அடைவான. அப்படிப் பேரம் பேசி சாமான்களை வாங்கி லாபம் அடைவதில கெட்டிக்காரன

எல்லா வல்லவர்களும், கற்றவர்களும, கெட்டிக்காரர்களும் ஒன்றுசேர்ந்து பொருளை வாங்கினாலும் அவனது மூளைக்கு ஈடு கொடுத்து வாங்க முடியாது. அதுமட்டுமல்ல, லாபமும் பெற முடியாது. அப்படி ஒரு மூளை அவனுக்கு அது கடவுளின் அருள் இல்லையா ? அவனுக்கு மேலே அறுபதுக்கும் மேற்பட்ட எஜமானர்கள் இருந்தனர் அதில் பன்னிரண்டு பேர்கள் எந்த ஒரு பிரபுவுடனுடைய நிலங்களை

யும் வருமானத்தையும் எப்படிக் கையாள வேண்டுமெனத் தெரிந்தவர்கள். அவர்கள் சொற்படி கேட்டால் எந்தப் பிரபுவும் கைநீட்டி கடன் வாங்கும் தேவை வராது. அவர்களது அறிவுரைப்படி நடந்தால் வருமானத்துக்குள் வசதியாகவும், நேர்மையாகவும் வாழலாம்.

அவர்கள் கடன் சுமை தாளாது விழமாட்டார்கள். அப்படி விழுந்தால் அவர்கள் கிறுக்கர்களாகத்தான் இருக்க வேண்டும் அல்லது வாழத் தெரியாதவர்களாக இருக்க வேண்டும்.

எந்த ஒரு பாதகமான சூழநிலையிலும் அத்தொகுதியில் உள்ள மக்களுக்கு அவர்கள் அறிவால் உதவி அவர்களைக் காப்பாற்ற முடியும். இருந்தாலும் அவர்களையெல்லாம் மிஞ்சியவன் இந்த மான்சிபல்.

ரீவ் (The Reeve)

இவர் பண்ணையை மேற்பார்ப்பவர். அவர் ஒல்லியாக இருந்தார். குணம் கெட்டவர். முகத்தை நன்கு சவரம் பண்ணி வைத்திருந்தார். காதையொட்டி தலை முடியை வெட்டியிருந்தார். ஒரு பாதிரியாரைப் போல முடி இருந்தது. அவர் கால்கள் நீளமாக இருந்தன. ஒரு குச்சியைப் போல இருந்தன (காம உணர்வு அதிகம் உள்ளவர் என்று நம்பப்பட்டது). அதில் சதை அவ்வளவாகக் காணப்படவில்லை.

அவர் ஒரு தானியக் கிடங்கை தனியாக ஏற்படுத்தி நடத்தி இயக்க முடியும். அதை எந்தக் கணகாணிப்பாளராலும்

கண்டுபிடிக்க முடியாது. அவ்வளவு திறமைசாலி, வறட்சி, மழை, தானிய விளைச்சல் அத்தனையும் அவர் முனகூட்டியே கணித்துச் சொல்லக்கூடியவர்.

இன்னொரு வகையில் சொல்லப் போனால் மழையை வைத்து எவ்வளவு தானியம் விளைச்சலில் கிடைக்கும் என்று சொல்லக்கூடிய ஆற்றல் படைத்தவர்.

ஆடு, மாடு, பண்ணை, பன்றி, குதிரை, இருப்பு, கோழிப் பண்ணை அத்தனையையும் அவர் முதலாளிக்காக அவரே கவனித்து வந்தார்.

முதலாளி இருபது வயது அடைந்ததிலிருந்தே அவர் சொன்னபடியே கணக்கை ஒழுங்காகக் காட்டி விடுவார். முதலாளிக்கு எரவேண்டிய பணத்தை ஒழுங்காக தேதி தவறு முன வாங்கி விடுவார்.

முதலாளிக்கு பாக்கி வைக்க விடமாட்டார். அவர் கணக்கில் யாரும் தப்பு கண்டுபிடிக்க முடியாது. கணகாணிப்பவரோ, வேறு வேலைக்காரர்களோ அவரை ஏமாற்ற முடியாது. அவர்கள் எப்படி ஏமாற்றுவார்கள் என்பதை நன்கு தெரிந்து வைத்திருந்தார். ஆகையால் அவர்கள் இவரைப் பார்த்தால் பிளேக்கு (தொற்று நோய்) நோயைக் கண்டு பயப்படுவதைப் போல பயப்படுவார்கள்.

அவருக்கென்று அங்கு ஒரு அழகிய இடத்தில் வீடு கட்டிக் கொண்டார். மரங்கள் சூழ்ந்திருந்தன. பொருள்களை விலைக்கு வாங்கும் கலையை அவர் முதலாளியைக் காட்டிலும் நன்கு தெரிந்து

வைத்திருந்தார். அவர் தனிப்பட்ட முறையில் வியாபாரத்தில் நிறைய சம்பாதித்து வைத்திருந்தார். அவர் எப்படி முதலாளியைத் திருப்திப் படுத்த வேண்டும் என்பதை நன்கு அறிந்து வைத்திருந்தார்.

எடுத்துக்காட்டாய்ச் சொல்ல வேண்டுமென்றால் அவர் அவரது முதலாளியின் பொருளையே முதலாளிக்குத் தெரியாமல் எடுத்துக் கொடுத்து முதலாளியையே சந்தோஷத்தில் ஆழ்த்தி விடுவார். அதற்காக அவர் அவரிடம் நன்றியை மட்டும் பெற்றாட்டார். மேலாடையையும், தலையங்கியையும் சேர்த்து பெற்றுக் கொள்வார்.

இளம் வயதில் லாபகரமான தொழிலை கற்று வைத்திருந்தார். திறமையான வேலையாளி. அவர் ஒரு மர ஆசாரி. அவர் ஒரு நல்ல குதிரையில் சவாரி செய்து வந்தார். அந்தக் குதிரையில் சாம்பல் நிறப் புள்ளிகள் காணப்பட்டன. அதனுடைய பெயர் ஸ்காட்.

பெர்ஷியர்கள் அணியும் ஊதா நிற மேல் அங்கியை அவர் அணிந்திருந்தார். அவருடைய கையில் ஒரு துருப்பிடித்த வாளை வைத்திருந்தார். நான் வர்ணித்த பண்ணையார் நார்ப்போக்கைச் சேர்ந்தவர். அதில் உள்ள பெட்ஸ் எவில் நகரிலிருந்து வந்திருந்தார். அவர் ஒரு பாதிரியாரைப் போல அந்த உடையைச் சுற்றியிருந்தார்.

எங்களில் கடைசியாக அவர் ஆற அமர சவாரி செய்து வந்தார். அடுத்து மத நீதிமன்றத்தில் சம்மனர் வேலை பார்ப்பவர்.

சம்மனர் (The Summoner)

இவன் மத நீதி மன்றத்தில் வேலைப் பார்ப்பவன். இவனும் எங்களோடு இருந்தான். அவனுடைய முகம் நெருப்பைப் போல

சிவப்பாய் இருந்தது. அவன் முகம் முழுவதும் பருக்கள் நிறைந்திருந்தன. குறுகிய கணகள் படைத்தவன். உணர்ச்சி வசப்பட்ட மனிதன். சிட்டுக்குருவியைப் போல எந்த நேரமும் காம சுகத்தில் ஈடுபட விழைபவன். ஆசைப்படுவான். அவனுடைய புருவம் கறுப்பாக இருந்தது. அங்கு கொஞ்சம் அரிப்பு அதிகம் இருந்து சொறிந்ததால் அந்த இடத்தில் ஒரு புண் இருந்தது. அவனுடைய தாடி சீராக இல்லை. அவனுடைய முகத்தைப் பார்த்தால் சிறுவர்கள் பயப்படுவார்கள். குவிக சில்வர், லெட் ஆக்ஸைட், பிரிம்ஸ்டோன், போராக, வெள்ளை ஈயம், மச்சம் போக்கும் கிரீம். ஆயினமென்ட் எது போட்டாலும் அவனுடைய முகத்தில் உள்ள வடுவைப் போக்க முடியாது.

கனனத்தில் உள்ள சதையையும் ஒன்றும் செய்ய முடியாது. அவன் வெள்ளைப் பூண்டு, வெங்காயம், லீக (ஒருவகையான சாப்பிடக்கூடிய மூலிகை)கை விரும்பி அதிகம் சாப்பிடுவான். இரத்தம் போல சிவந்த ஒயினை (மதுபானம்) விரும்பிச் சாப்பிடுவான். அதைக் குடித்தவுடன் ஒரு கிறுக்கன் போலப் பேசுவான்.

அவன் அதிகமாகக் குடித்திருக்கும்போது லத்தீன மொழியைத் தவிர வேறு எதையும் பேசமாட்டான். இத்தனைக்கும் அம்மொழியில் அவனுக்கு ஓரிரு வார்த்தைகள் தாம் தெரியும்.

அதையும் சட்டப் பத்திரங்களிலிருந்து தெரிந்து வைத்திருந்தான். அதை அவன் அடிக்கடி கேட்பதால் அவனை அறியாமலேயே அவனது மூளையில் பதிவு செய்யப்பட்டு விட்டது.

எறத்தாழ மனபபாடமாக வைதிருந்தான் வால்ட்டர் என்ற பேரை வாட் என்று எப்படி போப்பாண்டவர் சத்தமாக உரைப்பாரோ அப்படி அல்லது ஜேய் என்ற ஒரு வகையான பறவை எப்படித் திருப்பித் திருப்பி வாட என்று சொல்லுமோ அதுபோலச் சொல்வான்

வேறு துறைகளில் கேள்வி கேட்டால் அவனால் பதில் அளிக்க முடியாது ஏனெனில அவனுக்குத தெரிந்ததெலலாம் லதத்தின மொழியில வழக்கததிலுள்ள சில வார்த்தைகளே அடிக்கடி வத்தீன் வழக்குச் சொல்லை அதிகமாக உபயோகப்படுத்துவான அதாவது 'கேளவி என்னவென்றால சட்டத்தை எப்படி இநத இடத்தில பயன்படுத்தலாம்?' என்பதே அவனது கேளவியாக இருக்கும்.

அவர் ஒரு மென்மையான அமோச்சியன், அன்பிதயம படைத்தவன, அவனைக் காட்டிலும் ஒரு சிறந்த தோழன கிடைக்க மாட்டார்.

அவனுக்கு கால் பாடடில (2 பின்ட்ஸ்) ஒயின கொடுதது ஒரு பெண்ணைக் கூட்டிக் கொடுத்து 12 மாதங்கள் அவனோடு வாழ விடவும் தயங்கமாட்டான் அவள செய்த பாவச் செயலையும் மன்னித்துவிடுவான்

இளம் பெண்களிடம அதிகம் சலுகை எடுத்துக் கொள்வான் சந்தர்ப்பம் கிடைத்தால் கறபழிக்கவும் தயங்கமாட்டான் ஒரு நல்ல மனிதனைக் காணடால் ஆக்கிடானஸ்காஸ் (மதத்தை விடடுத் தள்ளி வைத்தல்)கனைப் பற்றி கவலைப்பட வேண்டாம் எனச சொல்வான்.

அதாவது அவன் பணப்பையில்தான் ஆத்மா இருக்கிறது ஆர்க்கிடாண்ஸ்கர்ஸில் இல்லை என்பதை நம்புபவனாக இருக்க வேண்டும் எனக் கற்றுக் கொடுப்பான்

பணத்தை அதிகமாகக் கொடுத்தால் ஆர்க்கிடாண்ஸ்கர்ஸிலிருந்து விடுபடலாம் என நினைப்பவனாக அவன் இருக்க வேண்டும் இந்த விஷயத்தில் அவன் பொய் சொல்கிறான் என எனக்கு நன்கு தெரியும்

குற்றம் செய்தவர் உண்மையிலேயே மதவிலக்கத்தைக் கண்டு பயப்பட வேண்டும் பாதிரியார் பாவச் செயலுக்கு மன்னிப்பளிக்கு ஆதுமாவைக் காப்பாற்றுவது போல மத விலக்கலும் ஒரு மனிதனுக்கு உள் வேதனையைக் கொடுக்கு ஒரு வகைச் சிதறுரவைத் செய்யவல்லது ஆகவே அவன் அதைக்கண்டு பயப்பட வேண்டும்.

குற்றம் செய்தவன் 40 நாட்களுக்கு மதவிலக்கம் செய்யப்பட்ட பின்பும் பிடிவாதமாக இருந்தால் அவனைக் கைது செய்ய ஆணை வரும் என்ற பயம் வரவேண்டும்.

அவனுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட இடங்களில் உள்ள இளம்பெண்களையெல்லாம் அவனுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தான் அவர்களுடைய இரகசியங்களைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்தான் அவர்களுக்கு அவ்வப்போது ஆலோசனை வழங்குவான்.

அவனுடைய தலையில் ஒரு மாலையைச் சூடியிருந்தான். அது சத்திரத்திற்கு முன்பாக இருக்கும் கொடிக்கம்பத்திலுள்ள மாலையைப் போல பெரிதாக இருந்தது. ஒரு வட்டமான பொட்டியை தனது பக்கத்தில் வைத்திருந்தான்

பார்டனர் (The Pardoner)

அவனோடு ஒரு பார்டனரும் (மதத்தின் சார்பில் மன்னிப்புக் கொடுப்பவர்) சவாரி செய்து வந்தார். அவர் சம்மனரின் தோழனும், நண்பனும் ஆவார்.

அவர் ரொஸ்ஸிவாசில் உள்ளவர். லண்டனில் உள்ள ஒரு கான்வென்ட் 'சாரிங்கிராஸ' (லண்டனுக்கு அருகாமையில் உள்ள ஒரு கான்வென்ட்) லஸச சேர்ந்தவர்.

அவர் ரோமில் உள்ள மத நீதி மன்றத்திலிருந்து நேராக இங்கு வந்திருப்பதாகக் கூறினார். அவர் உரத்த குரலில் வாருங்கள் இங்கே நேசியுங்கள் என்னை என்று பாடலைப் பாடினார். சம்மனரும் வளமான குரலில் அவருடன் சேர்ந்து பாடினார். முரசொலி கூட பார்டனரின் குரலுக்குப் பாதி ஈடு கூட கொடுக்க முடியாது. அவ்வளவு உரத்த குரலில் பாடினார்.

அவர் முடி மெழுகைப் போல மஞ்சள் நிறத்தில் இருந்தது. முடியோ சணல் போல தொங்கியது. அது தோளை மறைக்கும்படியாக இருந்தது. முடி மென்மையாக இருந்தது. தோளில் அது இங்கும் அங்குமாக ஆடிக் கொண்டிருந்தது. அவர் தலையங்கி அணிந்திருக்கவில்லை. ஏனெனில் அதை அவர் தன் பையினுள்ளே வைத்திருந்தார்.

அவர் நவநாகரீகமாக முடி வளர்த்து சவாரி செய்வதாக நினைத்துக் கொண்டிருந்தார். தலையில் ஒரு தொப்பி மட்டும் இருந்தது. முயலைப் போன்று அவரது கண்கள் பளபளப்பாய் இருந்தன. அந்தத் தொப்பியில் கிறிஸ்துவினுடைய படம் பின்னப்பட்டிருந்தது.

அவருடைய பையை தன் தொடைக்கு முன்னால வைத்து இருந்தார். அவர் பை நிறைய மத நீதிமன்றத்திலிருந்து (போப ஆண்டவரின் நீதிமன்றம்) கொணடு வந்திருந்த பேப்பர்கள இருந்தன. அவற்றை ரோமிலிருந்து எடுத்து வந்ததாகக் கூறினர்

ஆட்டின குரலைப் போல அவரது குரல் மெதுவாக இருந்தது. தாடி வைத்திருக்கவில்லை. அவர் வைக்க வேணடும் என்ற எண்ணத்திலும இலலை அவர் ஒரு அலிபைப் போல காட்சி அளித்தார்.

அவர சவரம் செய்திருந்ததால முகம் மென்மையாகக் காட்சி அளிததது பெர்டிக்கிலிருந்து வேர் வரைக்கும அப்படியொரு பார்டனைப் பார்க்க முடியாது. அவரது தலையங்கியின் உறை அவரது பைக்குள இருந்தது. அது கன்னி மேரியின முகத்தினை என்று சொல்லி வருதார்.

ஒரு சின்ன பாய்மரத்துணியை வைத்திருந்தார். அது (புனித) பீட்டர் கடலின மேற்பரப்பின் மீது நடக்கும் போது வைத்திருந்தது எனச் கூறுவார பின்ப அவரது உதவியரு இயேச கிறிஸ்து வந்தார் எனக் கூறுவார்.

வெண்கலத்தால ஆன சிலுவை ஒன்றைக கையில் வைத்திருநதார். அதில் விலை உயர்ந்த ரதிகைகற்கள பதிகைப் பட்டிருந்தன. ஒரு பனறியின எலுமபையும் வைத்திருந்தார கேட்டால் அது ஒரு புனிதரது எலுமபு எனக கூறுவார இந்தப் புனிதமான பனறிய நூபகச் சின்னங்களைக் கொண்டு நிறைய சம்பாதித்தார. இதைக்காட்டிக் காடடி சின்ன பாதிரியாரகள் இரண்டு மாதம் சமபாதிப்பதை ஒரே நாளில் சம்பாதிதது விடுவார்

நேர்மையாக இருப்பதாக தன்னைக் காட்டிக கொண்டு தந்திரமாக சிறிய பாதிரியார்களை முட்டாள்களாக்கி விடுவார் பாதிரியாரையும், அவரைச் சார்ந்த மக்களையும் மிக எளிதில ஏமாற்றி விடுவார் அவர் தேவாலயத்தில் மதிப்புமிக்க பாடனராக நம்பப் பட்டார், அவர் பைபிளிலிருந்து மேற்கோள காட்டுவார் அல்லது கதை சொல்லுவார் அல்லது ஒரு புனிதரின வாழ்க்கை வரலாறறைக் கூறுவார்.

மதச் சடங்கின் போது பிரார்த்தனைப் பாடலகளைப் பாடுவார் அதுவும் பீடத்தில ஒயினும, ரொட்டியும் கொடுக்கப்படும் போது பாடுவார் எப்போது எந்தப் பாட்டுப்பாட வேண்டும் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும் கூட்டுப் பிரார்த்தனையின் போது எப்படி இருக்க வேண்டும, எப்படிப் பேச வேண்டும என்பதை நன்கு தெரிந்து வைத்திருந்தார்.

அப்போது தான் பணம நன்றாகச் சம்பாதிக்க முடியும் என்பதையும் அவர் அறிவார். அதனால் அவர் அப்போது சந்தோஷமாகவும், உரத்த குரலிலும பாடுவார்

நான் இதுவரை சுருக்கமாகவும், தெளிவாகவும் யாத்திரீகர் களின பதவி அந்தஸ்து பற்றியும, அவர்கள் அணிந்திருந்த ஆடை அணிகலன்களைப் பற்றியும், ஏன நாங்கள் பெல்சத்திரத்திற்கு அருகில் உள்ள அருமையான டாப்ரட்சின் சதகிரத்தில் கூடினோம என்பதையும் வெளிப்படையாகச் சொல்லிவிட்டேன்

அந்த இரவில் நாங்கள ஏன் அங்கு சென்றோம் என்பதையும் நான சொல்ல வேண்டியிருக்கிறது. பிறகு, பயணத்தைப் பற்றியும், அப்போது அங்கே என்ன நடந்தது என்பதையும் விவரிக்கிறேன்

எனனை யாரும் வித்தியாசமாகப் பார்க்காமல் பெருந்தனமை காட்டுவீர்கள் என நம்புகிறேன்

ஏனெனில் நான் வர்ணனை செய்யும்போது ஒளிவு மறைவினறி உண்மையைச் சொல்வேன். அவர்கள் யாத்திரையின் போது எப்படி நடந்து கொண்டார்கள் என்பதைப் பற்றியும் பின்னால் சொல்லப் போகிறேன். அவர்கள் சொன்னவற்றை அப்படியே வார்த்தை மாறாமல் சொல்லப் போகிறேன். எனனைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். உங்களுக்கு இப்போது நான் என்ன செய்யப் போகிறேன் என்று தெரியும்.

மற்றவர்கள் கதையை யார் சொன்னாலும் அப்படியே சொல்ல வேண்டும். அந்த உணர்வுகளை அப்படியே பிரதிபலிக்க வேண்டும். முடிந்தவரை அப்படியே அதைப் பிரதிபலிக்க வேண்டும். வார்த்தை மாறாமல் சொல்ல வேண்டும்.

ஞாபகத்தில் உள்ள அனைத்தையும் ஒன்று விடாமல் சொல்ல வேண்டும். கதை கொடூரமாக இருந்தாலும் வார்த்தைகள் மோசமாக இருந்தாலும் கதையை அப்படியே சொல்ல வேண்டும். இல்லையென்றால் கதை சொல்பவர் நடந்ததை, நிகழ்வுகளை நேர்மையுடன் சொல்ல முடியாது. உண்மை மறைந்துவிடும்.

இக்கட்டான நிலைவந்தால் தகுந்த வார்த்தைகளை மாற்றிப் போடலாம். வேறு எதையும் புனையக் கூடாது. கதை சொல்பவர் யாரையும் விட்டு வைக்கக் கூடாது. அது சகோதரராக இருந்தாலும் சரி, அப்படியே சொல்ல வேண்டும்.

பேசியபடியே, நடந்தபடியே சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு அல்லது நிபந்தனைக்கு ஆளாகியிருக்கிறார் கிறிஸ்துவே

வெளிப்படையாகப் பேசியிருக்கிறார் 'கோஸபல'இல் ஒளிவு மறைவினறிப் பேசியிருப்பதைக் காணலாம். கிறிஸதுவின் வார்த்தைகள் நிலைத்து நிற்கும் தன்மை உடையவை என்பது உங்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மை

பிளாட்டோ சொல்லியிருப்பதைப் போல (அவரைப் படித்தவர்களுக்கு அது தெரியும்) வார்த்தைகள் நம் எண்ணத்தையும், சிந்தனையையும் அப்படியே வெளிப்படுத்த வேண்டும். அதற்கு சாதாரண வார்த்தைகளை உபயோகிக்கலாம் நான் யாத்திரீகர்களின் தரம் பார்த்து அந்தஸ்து பார்த்து அதன்படி வரிசையாக யாத்திரீகர்களை வாணிக்கவில்லையென்றால் நீங்கள் என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதற்கு நாமே பொறுப்பு.

ஆகவே என்னுடைய குறைதான் என்பதை நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும்.

வரவேற்பாளர் (The Host)

எங்களை சத்திரத்தில் உபசரித்தவர் நன்கு வரவேற்றார் வரிசைப்படி அமர்வைத்தார் ஆகவே தாமதமின்றி சாப்பிட முடிந்தது. மிக நல்ல உணவுகளை எங்களுக்குப் பரிமாறினார் மிகக் செட்டியான ஒயினை எங்களுக்குக் கொடுத்தார் நாங்களும் அதை அருந்தும் மனநிலையில் இருந்தோம் எங்களுக்கு விருந்து கொடுத்தவர் ஓர் ஆண் வரவேற்பாளர்

ஆகவே அவர் விருந்து உண்ணும் இருக்கையில் மரியாதை யுடனும், துடுக்காகவும் உள்ள ஒரு மார்ஷலைப் போல எங்களுக்கு உணவு பரிமாறினார் அவர் சற்றுப் பருமனானவர் அவரின் கண்கள்

ஒளிமிக்கதாய் இருந்தன. சீப் சைடில் அவரைப் போன்ற ஓர் உடசரணையாளரைப் பார்க்க முடியாது. தைரியமாகப் பேசுவார். அறிவோடு நடந்து கொள்வார். நன்றாகப் படித்தவர் அவருடைய ஆண்மையில் எந்தவிதமான குறையும் கூற முடியாது. அவரிடம் நகைச்சுவை குணம் குடிகொண்டிருந்தது.

இரவு சாப்பிட்ட பின்னர் நகைச்சுவை விருந்தளிப்பார். பல விஷயங்களைப் பற்றிப் பேசுவார். அதுதுடன் வாழ்வின சந்தோஷத்தைப் பற்றிப் பேசுவார். நாங்கள் பில்லுக்குப் பணம் கொடுத்தவுடன் இவ்வாறு பேசினார்

இப்பொழுது பண்பாளர்களே, நான் உங்களை மனமார வரவேற்கின்றேன் சந்தோஷமாகச் சொல்கிறேன் இந்த ஆண்டில் இப்படி ஒரு சந்தோஷமிக்க பாத்திரக்கள் குழுவை நான் இந்தச் சந்திரத்தில் இது போன்ற சந்தர்ப்பத்தில் நான் இதுவரை பார்த்ததில்லை. எப்படி உங்களை உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் வைத்திருப்பது என்பது தெரிந்திருந்தால் நான் அதைச் செய்து காட்டியிருப்பேன்.

உங்கள் பொழுதை மகிழ்ச்சியாக வைத்திருக்க இப்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது அதற்கு செலவு செய்ய வேண்டியதில்லை. நீங்கள் தேன்டாபரிக்குப் போய்க் கொண்டிருக்கிறீர்கள் கடவுள அருளையும், உதவியையும், ஆசியையும் புரிவார் இது ஒரு ஆன்மீக பயணம். ஆசீர்வதிக்கப்பட்ட புனிதர் தாமஸ் உருகளுக்கு அருள் புரிவார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

நீங்கள் எடுத்துக் கொண்ட சிரமமான காரியத்திற்கான பலனையும் தருவார் கல்லைப் போல அமைதியாக இருந்து கொண்டு குதிரை மீது சவாரி செய்து போவது என்பது இயலாத

காரியம். ஆகவே போகும் வழியில் கதையைச் சொல்லிக் கொண்டு மகிழ்ச்சியாக இருக்க திட்டம் போட்டிருக்கிறீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அமைதியாகப் போனால் அதில் சுகமோ மகிழ்ச்சியோ இருக்காது.

ஆகவே உங்கள் கவனத்தை மாற்றுவேன். உங்களை ஈர்க்க வல்ல சில பொழுதுபோக்கு அம்சங்களை நான் கொடுப்பேன். என் இறந்துபோன தந்தையின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன், நீங்கள் எல்லோரும் ஒத்துக் கொண்டால் என்னுடைய சொல்லுக்கு கட்டுப்பட்டு நடந்தால் நாளை பயணம் புறப்படும்போது என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிச் சொல்கிறேன்.

அப்படிச் செய்தால் சந்தோஷமாக இருக்கும். அப்படி சந்தோஷமாக இல்லையென்றால் என் தலையில் நீங்கள் அடிக்கலாம். இனி பேசாதீர்கள். சம்மதம் தெரிவிக்கின்றேன் என்பதற்கு அடையாளமாக கையைத் தூக்கிக் காட்டுங்கள்.

நாங்கள் விரைவாக முடிவு எடுத்தோம். அதைப்பற்றி விவாதிக்கவோ, சிந்தனையில் ஆழ்ந்திடவோ தேவையில்லை. ஆகவே அவரை எந்தவிதமான தயக்கமும் இன்றி அவர் நினைத்தபடி சொல்லச் சொன்னோம்.

அவர் சொன்னார். பணபாளர்களே நல் எண்ணத்தோடு நான் சொல்வதைக் காது கொடுத்துக் கேளுங்கள். நான் சொல்வதை வெறுப்புடன் கேட்காதீர்கள்.

பயணச் சுமை தெரியாமல் இருக்கவும், மகிழ்ச்சியாக இருக்கவும் கேனடர்பரிக்குப் போகும் போது ஒவ்வொருவரும் இரண்டு கதைகள் சொல்ல வேண்டும். அதேபோல திரும்பி

வரும்போதும் இரண்டு கதைகள் சொல்ல வேண்டும். கதை சாகசச் செயலகளைப் பற்றி இருக்க வேண்டும். அது ஒருகாலகட்டத்தில் நடந்தவையாக இருக்க வேண்டும். யார் கதை நன்றாக இருக்கிறதோ, இல்லை யார் மிகச் சிறப்பான சிறந்த கதை சொல்கிறார்களோ அவர்களுக்கான காலைச் சிற்றுண்டிக்கான செலவை மற்ற எல்லோரும் சேர்ந்து செலவழிக்க வேண்டும்.

அதுவும் காண்டர்பரியிலிருந்து திரும்பும் போது இந்த இரண்டு கம்பங்கள் அருகில் உள்ள அந்தச் சிற்றுண்டிச் சாலையில் செலவை ஏற்க வேண்டும். உங்கள் உற்சாகம் நீடிக்க நான் என செலவிலேயே உங்கள் பயணத்தில் கலந்து கொள்கிறேன்.

உங்களுக்கு வழிகாட்டியாகவும் நான் இருப்பேன். சொல்வதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் வழியில் செலவழித்த பணம் அனைத்தையும் திருப்பித் தர வேண்டும். இதற்கு ஒத்துக் கொண்டால் அதுவும் காலதாமதமின்றி நானும் சொன்னபடி தயாராகி இருப்பேன்.

வரவேற்று உபசரித்தவர் சொன்னது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. மனதார சந்தோஷமாகக் கட்டுப்பட்டு நடந்து கொள்ள ஒப்புக் கொண்டோம். அவர் சொன்னதை அங்கீகரித்தோம். அவரை இயக்குநராகவும் அவர் சொல்வதைக் கேட்பதாகவும் ஒத்துக் கொண்டோம். அவர் மேற்கொள்ள வேண்டிய பணியை செய்யச் சொன்னோம். அதாவது அவரையே எல்லாவற்றிற்கும் நடுவராக இருக்கச் சொன்னோம்.

குறிப்பிட்ட பணத்திற்குள் சிற்றுண்டிக்கு ஏற்பாடு செய்யச் சொன்னோம். நாங்கள் அவர் சொல்லுக்குக் கட்டுப்படுவோம் என்று சொன்னோம். அது பெரிதாக இருந்தாலும் சரி, சிறியதாக

இருந்தாலும் சரி, அவருடைய திட்டத்திற்கு ஒப்புக்கொண்டோம். இந்நிகழ்ச்சி முடிந்ததும் ஒயின் கொண்டுவரப்பட்டது.

அதைக் குடித்துவிட்டு படுக்கைக்கு ஒய்வெடுக்கப் போனோம். காலைப் பொழுதில் காகங்கள் கரைந்து மக்களை எழுப்புவது போல எங்கள் வரவேற்பாளர் எங்கள் எல்லோரையும் அடுத்த நாள் அதிகாலை எழுப்பிவிட்டார்.

குழுக்களாக அமைத்து எங்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தார். சத்திரத்தை விட்டு சவாரி செய்து கொண்டு வெளியே வந்தோம். நடப்பதைக் காட்டிலும் சற்று வேகமாக வெளியேறினோம். புனித தாமஸின் ஊற்றுக்கு அருகில் வந்துவிட்டோம். அப்போது எங்களை உபசரிப்பவர் குதிரையின் வேகத்தைக் கட்டுப்படுத்தி மெதுவாக வந்தார்.

அவர் சொன்னார் 'பணபாளர்களே, நான் சொல்வதைக் கேளுங்கள். நாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தைப் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள். அதை நான் நினைவுகூர விரும்புகிறேன். காலையில் பாடிய பாட்டை மாலையில் ஒவ்வொருவரும் அதேபோல் மாலையிலும் பாடினால் யார் முதலில் கதையைச் சொல்லப் போகிறவர் என்பதைத் தீர்மானிப்போம்.

நான் உறுதியாகச் சொல்கிறேன். ஒயினோ, ஏல் மறுபடி குடித்து விட்டு இருந்தாலும் அந்நிலையில் என் வார்த்தையை மதிக்காதவர்கள், அல்லது மீறுபவர்கள் வரும் வழியில் செலவழித்த பணத்தையெல்லாம் கொடுக்க வேண்டும். இது ஒரு நிபந்தனை.

நாம் மேலே தொடர்வதற்கு முன்பு குலுக்கல் முறையில் திருவுளச் சீட்டு போடுவோம். அதில் யார் பெயர் முதலில் வருகிறதோ

அவரே முதலில கதையைச் சொல்லி ஆரம்பிக்க வேண்டும். போர் வீரரே! என்னுடைய எஜமானரே! என்னுடைய முடிவுப்படி நீங்கள்தான் திருவுளச் சீட்டைப் போட்டு விளையாட்டை ஆரம்பிக்க வேண்டும். கிட்ட வாங்க என்று அவர் சொன்னார். பெண் பாதிரியாரே, ஆகஸ்ஃபோர்ட் அறிவாளியே, உங்களுடைய கூச்ச சுபாவத்தை விட்டு விடுங்கள்.

மனத்தைப் போட்டு அலட்டிக்கொள்ளாதீர்கள் கையை நீட்டி அவரவர்கள் திருவுளச் சீட்டை எடுங்கள்" என்றார் எல்லோரும் சீட்டை எடுத்தோம். அதிர்ஷ்டமோ விதியோ, தெரியவில்லை. முதன் முதலில் போர் வீரர் பெயர் வந்தது. திருவுளச்சீட்டு போட்ட முறை எல்லோருக்கும் திருப்தியாக இருந்தது.

போர் வீரர் இப்போது கதை சொல்ல வேண்டும். விதிமுறைகள் போட்டபடி அவர்தான முதன்முதலில் கதையைச் சொல்ல வேண்டும். என அதிகம் பேசவேண்டும்? நைட் ஒரு நல்ல மனிதன். கதை சொல்ல வேண்டியது இப்போது அவரது கடமை...

அவர் ஞானஸ்தர் ஒப்பந்தப்படி நடக்க விரும்பினார். அவர் சொன்னார். "நான் விளையாட்டை ஆரம்பிக்க வேண்டும் கடவுள் செயலால் வந்த இந்தச் சீட்டை உளமார ஏற்றுக் கொள்கிறேன நாம் பயணத்தைத் தொடர்வோம். நான் சொல்லப்போகும் கதையைக் கேளுங்கள்..."

இப்படிச் சொல்லியபடியே பயணத்தை ஆரம்பித்தோம். மகிழ்ச்சியுடன் அவர் கதை சொல்ல ஆரம்பித்தார். அவர் இவ்வாறு சொன்னார்.

குறிப்புகள்

குறிப்புகள்

Chaucer's characters live age after age. Every age is a canterbury pilgrimage. we all pass on, each sustaining one of these characters. nor can a child be born, who is not one or other of these characters.

- William Blake (1809)

அந்தோனசிரியரின் பிற நூல்கள்

1. அந்தக் கிராமத்து மாளிகையில்
   "Up at the Villa" in Tamil - W. Somerset Maugham
2. நோபல் பரிசு வென்ற எழுவரின் ஒரங்க நாடகங்கள்
   One - Acters by Seven Nobel Laureates
3. பெர்னாட்ஷாவின் பெருமை மிகு நாடகம் - போரும் காதலும்
   "Arms and the Man" in Tamil. Bernard Shaw
4. ஆஸ்கார் ஒயில்டின் சிறப்புமிகு நாடகம் - ஏனெஸ்ட்
   "Importance of being Earnest" in Tamil - Oscar Wilde
5. புகழ்மிக்க நாடக ஆசிரியர் மார்லோவின் டாக்டர் ஃபாஸ்டஸ்
   Marlow's "Dr. Faustus" in Tamil
6. மில்டனின் அற்புதப் படைப்பு - அரியோபேஜிடிக்கா
   Milton's "Areopagitica" in Tamil
7. ஷேக்ஸ்பியரின் சிறப்புமிகு நாடகம் - ஒத்தெல்லோ
   Shakespheare's "Othello" in Tamil
8. ஷேக்ஸ்பியரின் சிறப்புமிகு நாடகம் - மறக்கவியலா கிளியோபாட்ரா
   Shakespheare's "Antony and Cleopatra" in Tamil
9. ஷேக்ஸ்பியரின் சிறப்புமிகு நாடகம் - மேக்பத்
   Shakespheare's "Macbeth" in Tamil
10. ஷேக்ஸ்பியரின் சிறப்புமிகு நாடகம் - வெனிஸ் நாட்டு வியாபாரி
    Shakespheare's "Merchant of Venice" in Tamil